

மெல்லினம்

# கருத்து வேறுபாடுகள்

## இஸ்லாமிய சட்டத்துறையில் அதன் தோற்றத்துக்கான காரணங்கள்

கலாநிதி முஹம்மத் அபுல் பத்ஹ் பயானூனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பதிப்புரை / 5

1. முற்குறிப்பு / 9
2. கருத்து வேறுபாடுகள்: ஓர் அறிமுகம் / 16
3. கருத்து வேறுபாட்டிற்கான காரணங்கள் / 23
4. ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகக் கொள்ளப்படல் / 28
5. சட்ட வசனங்களை விளங்குதல் / 40
6. சட்ட மூலாதாரங்கள், விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடு / 51
7. முடிவுரை / 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அறிவுசார் விவாதங்கள், ஆய்வுகள் சமூகத்தின் வளர்ச்சியை, அதன் அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லுகின்றன. அறிஞர்கள் மத்தியில், ஆய்வகத்தில் நடத்தப்பெற வேண்டிய வாதப் பிரதிவாதங்கள், இன்று எவ்வித முன்னேற்பாடுமின்றி பொதுவெளியில் நிகழ்த்தப்படுகின்றன. கேட்பவர்களிடம் உடனடி மதிப்பைப் பெறும் நோக்குடன் அரங்கினில் பேசப்படும்போது, அவை பிளவுகளும், அவநம்பிக்கைகளும் உருவாகக் காரணிகளாய் அமைகின்றன.

முஸ்லிம் உலகம் பெரும் சவால்களை சந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில் சிறு பிரச்சனைகளைக் கொண்டு பிரதிகள் உருவாக்கப் படுவதையும் அதன்பால் கவனம் ஈர்க்கப்படுவதையும் காணலாம். மற்றொருபுறத்தில் இஸ்லாத்தின் செய்தி முழு மனித சமுதாயத்திற் கானது எனும்போது அறிமுகநிலையிலுள்ள நூல்களே பெரும்பாலும் உருவாக்கப்படுகின்றன. அவை சொன்னதையே திரும்பச் சொல் கின்றன; அவற்றில் புதிய கூறுகளோ நிகழ்கால பிரச்சனைகளைத் தொடும் சமூகவியல் நோக்கோ போதுமானளவு காணப்படுவதில்லை. இவை ஒருவித வாசிப்புச் சோர்வை ஏற்படுத்துகின்றன.

எண்ணற்ற பிரதிகள் கற்றலை மையப்படுத்தியே உருவாக்கப் படுபவை எனினும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரத்தினை மேம்படுத்தல், ஆய்வு நோக்கில் நூல்களை வெளியிடல் என்ற நோக்கில் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை.

வரலாறுகளைப் பதிவு செய்வது, பாதுகாத்து எதிர்காலத் தலை முறையினருக்குக் கொண்டு செல்வது அவசியம். வரலாறு மறந்த சமூகம் நினைவு தவறிய ஒரு மனிதனுக்கு ஒப்பாகும்.

ஆய்வு, புதிய வாசிப்பு முறையை உருவாக்கல், வரலாறுகளை மறுபதிவு செய்தல், அரசியலுக்கான தேவைகள் இவற்றிற்கான இடைவெளிகளை நிரப்பவேண்டிய தேவையுள்ளது. இத்தேவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பும் முயற்சியின் முதற்கட்டமாக இந்நூலை வெளியிடுகிறோம். இம்முனைவில் எமக்குத் துணைநின்ற தம்பி முஹம்மது காசிம் நண்பர்கள் பீர்முஹம்மது, ஷமீமுல் இஸ்லாம் ஆகியோருக்கு நன்றி.

கருத்து வேறுபாடுகள் மனித இனத்தின் தோற்றத்தோடு துவங்கி விட்டன. மனிதர்களின் அறிவுத்தர வேறுபாடு, பிரச்சனைகளை அணுகும்விதம், வாழும் சமூக பொருளாதார சூழல் மனிதர்களின் சிந்தனை வேறுபாட்டிலும் கருத்துகளிலும் பரந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. கிளையம்சங்களில் கருத்துபேதங்கள் என்பது இஸ்லாத்தின் ஒரு சிறப்புப் பண்பு என்றுகூடக் கூறலாம். அழைப்புப் பணி(தஃவா), சட்டத்துறை என்பவற்றில் மட்டுமன்றி நம்பிக்கைக் கோட்பாட்டின்(அகீதா) கிளையம்சங்களில்கூட சிற்சில கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற அளவுக்கு இஸ்லாத்தில் கருத்து வேறுபாடு களின் எல்லை மிக விரிவானது.

மனித சிந்தனைக்கும் ஆராய்ச்சி உணர்வுக்கும் இடமளிக்கும் வகையில் குர்ஆனிலும், ஸுன்னாவிலும் சில சட்ட வசனங்கள் நெகிழ் வுள்ளதாக அமைந்திருப்பதும், அவற்றை வித்தியாசமான அறிவுத் தரமுள்ள அறிஞர்கள் விளங்க முயல்வதும் இதற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

இஸ்லாம் நெகிழ்ச்சியுள்ள, இலகுவான, கால, தேச எல்லை களைக் கடந்து நுழையும் ஆற்றல் கொண்ட மார்க்கம் என்பதற்கு இக்கிளையம்சக் கருத்து வேறுபாடுகள் நல்ல சான்றாகும்.

கலாநிதி பயானூனி, இத்தகைய கருத்து வேறுபாடுகள் சட்டத் துறையில் ஏற்படுவதற்கான நியாயங்களையும் தவிர்க்க முடியாமை யையும் மட்டுமின்றி அதனை எப்படி அணுகவேண்டும் என்பதையும் சிறப்பாக விளக்குகின்றார். உண்மையில் கருத்து வேறுபாடுகள் என்பது பிரச்சனைக்குரியதோ முற்றாகக் களையப்பட வேண்டியதோ அல்ல. அதன் தோற்றத்துக்கான காரணங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும்போது அதை நாம் அங்கீகரிப்பதோடு அவற்றின் தேவை களையும் உணர்ந்துகொள்ள முடியும்.

உண்மையில் முந்நாளைய சட்ட அறிஞர்கள் ''கருத்து வேறுபாடு களை முஸ்லிம் சமூகத்துக்கான(உம்மத்) அருள்'' எனக் கருதினர். இந்நூற்றாண்டின் மாபெரும் சட்டமேதை முஸ்தபா அஹ்மத் ஸர்கா அதனை மனித சொகுசுக்கு இயைந்து கொடுக்கும் நாற்காலிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடுகிறார். இது கருத்து வேறுபாடுகளினால் ஏற்படும் வசதிகளைத் தெளிவுபடுத்துகின்றது. எனினும் அதனை எவ்வாறு அணுகவேண்டும் என்பதும் முக்கியமானது. ''கருத்தொருமைப்பட்ட விடயங்களில் ஒத்துழைப்போம். கருத்து வேறுபட்ட விடயங்களில் பரஸ்பரம் நியாயம் காண்போம்'' என்னும் இமாம் ரஷீத்ரிழா அவர்களின் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையிலும் ஐக்கியத் திலும் இச்சமன்பாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அதனை எவ்வளவு தூரம் நாம் அனுசரிக்கிறோம் என்பதிலேயே நமது ஒருமைப் பாடும் வெற்றியும் தங்கியுள்ளது.

✱

காலத்தின் முக்கிய தேவை கருதி இந்நூலை அரபியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த உஸ்தாத் எம்.ஏ.எம்.மன்ஸூர் அவர்களுக்கு எங்களது நன்றி.

இந்நூலின் முற்குறிப்பும், முடிவுரையும் மொழிபெயர்ப்பாளரின் ஆக்கமாகும். அவசியம் கருதி அவை இரண்டு பகுதிகளும் இங்கு சேர்க்கப்படுகின்றன.

கட்டுரைத் தொடராக இலங்கையிலிருந்து வெளிவரும் இஸ்லாமிய சிந்தனை என்னும் காலாண்டிதழில் வெளிவந்தது. பின்னர் நூல் வடிவில் இலங்கை மீள்பார்வை பதிப்பகம் வெளியிடப்பட்டது.

இந்தியாவில் வெளியிட அனுமதித்த மீள்பார்வை ஆசிரியர் ரவூப்ஸெய்ன், ஐயூப்கான், ஒளியச்சு செய்த கதிர் ஆகியோருக்கு எங்களது நன்றி.

அ.ஸையத் முஹம்மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்குறிப்பு

இது கருத்து வேறுபாடு குறித்து விளக்குகின்ற நூல். குறிப்பாக இஸ்லாமியச் சட்டப்பகுதியில் கருத்து வேறுபாடுகள் தோன்றக் காரணங்கள் யாவை? என்பதை இது விளக்குகிறது. இந்த வகையில் சட்டப்பகுதியில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான நியாயங் களை இந்நூல் ஆராய்கின்றது.

கருத்து வேறுபாடுகளோடு உறவாடுவது குறித்த முதல் அடிப்படை இதுவே. அதாவது கருத்து வேறுபாடுகள் ஏற்பட நியாயமான காரணங்கள் உள்ளன என்பதைப் புரிந்துகொள்வது, அவை தவிர்க்க முடியாதவை என்பதை ஏற்றுக் கொள்வதற்கு உதவும். உண்மையில் மனித அறிவின் இயல்பினாலும் அல்லாஹ் இறக்கி வைத்த சட்ட வசனங்களின் பண்புகளாலும் கருத்து பேதங்கள் தோன்றுகின்றன. இப்பின்னணியில் இமாம் ரஷீத் ரிழா வகுத்த கீழ்வரும் விதி கருத்து வேறுபாடுகளோடு உறவாடுவது குறித்த அடிப்படை உண்மையை நமக்குத் தருகிறது:

''கருத்து உடன்பாடுகொண்ட இடங்களில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வோம். கருத்து வேறுபாடு கொண்ட இடங்களில் ஒவ்வொரு பிரிவினருக்கும் அதற்கான நியாயங்கள் இருப்பதாகக் கண்டு கொள்வோம்.''

''அல்லாஹ் சட்ட வசனங்களை வரையறுத்து, திட்டவட்டமான சொற்பிரயோக அமைப்பிலேயே இறக்கியுள்ளான். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மிகத் தெளிவாகவும். திட்டவட்டமாகவும், நெகிழ்ந்து கொடுக்காத வகையிலுமே சட்டங்களை வகுத்தளித்துள்ளார்கள். எனவே, சட்ட வசனங்கள் அனைத்தும் ஒரு கருத்தை மட்டுமே தரக்கூடியவை. பல கருத்துகளுக்கு அங்கு இடம்பாடு கிடையாது.'' இந்த வகையான சிந்தனைப் போக்குதான் கருத்துவேறுபாடுகள் பாதகமான விளைவுகளைத் தரக் காரணமாகிறது. இத்தகைய சிந்தனைப்போக்கு கொண்டவர் தனது கருத்துகளுக்கு மாற்றமான வற்றை நூதனங்(பித்அத்)களாகவும், ஸுன்னாவுக்கு மாற்றமானவை யாகவும் தடுக்கப்பட்டவை(ஹராம்)களாகவும் மட்டுமே காண்பார். மாற்றுக் கருத்துக்கு இத்தகைய வரிடம் இடமிருக்காது. எனவே தனக்கு மாற்றமான கருத்துகளைக் கடுமையாக எதிர்க்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்ற சிந்தனையே இத்தகையவரிடம் காணப்படும். விளைவாக சமூகப் பிளவுகளுக்கு இது வழிவகுக்கும். சகோதரத்துவ மனப்பாங்கு இல்லாமல் போகும்; ஒற்றுமை குலையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பின்னணியில் நோக்கும்போது இந்நூல் மிக முக்கியமான தொரு சிந்தனையை இங்கு விளக்க வருகிறது. முஸ்லிம் தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் இக்கருத்தைச் சரியாகப் புரிந்துகொள்வது மிகவும் அவசியமானது.

முஸ்லிம் சமூகம் பல வகையிலும் பின்தங்கி. சீர்கேடுகள் பல நிறைந்து போயுள்ள இக்காலப்பிரிவில் மீண்டும் இச்சமூக எழுச்சிக்காக பாடுபடுவோருக்கு இஸ்லாத்தை விளக்குவதற்கான இருபது அடிப்படை உண்மைகளை இமாம் ஹஸனுல் பன்னா(ரஹ்) வகுத்துக் கொடுத்தார்கள். அவற்றில் ஒன்று இக்கருத்தை விளக்குகிறது:

''கிளைப் பிரச்சனைகளில் தோன்றும் சட்டக் கருத்து வேறுபாடுகள் மார்க்கத்தில் பிளவுகள் தோன்றக் காரணமாக இருக்க முடியாது. எதிர்ப்புணர்வுகளுக்கும், குரோத மனப்பாங்குகளுக்கும் அது இட்டுச் செல்ல முடியாது. அப்பகுதியில் ஒவ்வொரு முஜ்தஹிதுக்கும் கூலி உண்டு. எத்தகைய பிடிவாதப் போக்கும் கண்டிக்கத்தக்க குதர்க்க வாதங்களுமின்றி சகோதரத்துவ உணர்வோடும் சத்தியத்தைப் புரிந்து கொள்ள பரஸ்பரம் உதவிக் கொள்ளும் மனப்பாங்கோடும் கருத்து வேறுபாட்டிற்குரிய பிரச்சனைகளை தூய்மையோடு அறிவியல் ரீதியாக ஆய்வுக்குட்படுத்துவதற்கு எத்தகைய தடையும் கிடையாது.''

கருத்து வேறுபாட்டிற்குரிய பிரச்சனைகளில் எது மிகச் சரியானது என ஆய்வுசெய்வது தேவையானது, மிக முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்த ஆய்வு சகோதரத்துவ உணர்வோடு நடக்கவேண்டும். சத்தியத்தைப் புரிந்துகொள்ள உதவுவதாக அது அமைய வேண்டும். அத்தோடு சட்டப்பகுதியில் கருத்துவேறுபாடு தோன்ற நியாயங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

உண்மையில் நமது பிரச்சனை கருத்து வேறுபாடுகளல்ல. கருத்து வேறுபாடுகளோடு உறவாடி அவற்றை எவ்வாறு நெறிப்படுத்திச் செல்வது என்பதே நமது உண்மையான பிரச்சனையாகும். அந்த வகையில் கருத்து வேறுபாடுகளோடு உறவாடுவதன் முதல் அம்சம் அவற்றை அங்கீகரிப்பதாகும் என்பதே இங்கு விளக்கப்படுகிறது.

அல்குர்ஆனும், ஸுன்னாவும் சகோதரப் பாங்கை வலியுறுத்து கின்றன. ஒரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமுக்கும் உள்ள தொடர்பு சகோதரத்துவம் என்பதாகும் எனவும் அது விளக்குகிறது. சகோதரத்துவ உணர்வின்றி வாழ்வதை பெரும் பாவமாக இஸ்லாம் கருதுகிறது.

அல்குர்ஆன் கூறுகிறது: ''முஃமின்கள் சகோதரர்களே'' (ஹுஜுராத்: 10) இந்த வசனத்தின் பின்னர் சகோதரத்துவத்துக்குப் பங்கம் விளை விக்கும் அம்சங்களை விளக்கி அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரத்துவம் இறைத்தூதர்(ஸல்) அவர்களது அழைப்புப்பணி (தஃவா)யின் வெற்றிக்கு இரண்டாவது பிரதானமான காரணமாக இருந்துள்ளது என அல்குர்ஆன் விளக்குகிறது:

''அவன்தான் உங்களை அவனது உதவியின் மூலம் பலப் படுத்தினான். முஃமின்கள் மூலமும் பலப்படுத்தினான். அந்த முஃமின்களது உள்ளங்களிடையே சகோதரப் பிணைப்பை ஏற்படுத்தினான்.'' (அன்ஃபால்: 62,63)

''அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றைப் (அல்குர்ஆனை) பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பிளவுபட்டு பிரிந்து விடாதீர்கள்.''

என சகோதரத்துவத்தை வலியுறுத்தி ஏற்கனவே அரபு மக்கள் பிளவுண்டிருந்தமையை ஞாபகமூட்டி, பழைய சமூகங்கள் பிளவுபட்டு, சிதறிப்போனமையையும், பிளவுபடல் மறுமையில் கடுமையான தண்டனைக்குக் காரணமாக அமையும் என்பதையும் விளக்கு கிறது. (ஆல இம்ரான்: 103 -105)

சகோதரத்துவத்தை இறைத்தூதர்(ஸல்) அவர்களும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தியுள்ளார்கள். இங்கு அது சம்பந்தமான சில ஹதீஸ்களை மட்டும் தருகிறோம்; ஸஹீஹ் முஸ்லிமில் கீழ்வரும் ஹதீஸ் பதிவாகியுள்ளது:

''இறை நம்பிக்கை (ஈமான்) கொள்ளும் வரையில் நீங்கள் சுவர்க்கம் புகமாட்டீர்கள். ஒருவருக்கொருவர் அன்புகொள்ளும் வரை இறை நம்பிக்கை (ஈமான்) கொண்டவர்களாகவும் மாட்டீர்கள்.''

இங்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இறைநம்பிக்கை(ஈமான்)க்கும் சகோதரத்துவத்திற்குமிடையேயுள்ள இறுக்கமான தொடர்பை வலியுறுத்திக் காட்டுகிறார்கள்:

''திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் செயல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அல்லாஹ்வுக்கு இணைவைக்காத அனைவரது பாவங்களையும் அந்நாட்களில் அல்லாஹ் மன்னித்து விடுகிறான். ஆனால் ஒரு மனிதனுக்கும் அவனது சகோதரனுக்குமிடையே குரோத உணர்விருப்பின் அவர்கள் இருவரையும் சமாதானமாகும் வரையில் விட்டு வையுங்கள்'' என அல்லாஹ் கூறுகிறான். (ஸஹீஹ் முஸ்லிம், முஅத்தா மாலிக், ஸுனன் அபூதாவூத்)

''மூன்று பேரின் தொழுகை அவர்களின் தலைக்குமேல் ஒரு சாணள வேனும் உயர்த்தப்படுவதில்லை. தன்னை வெறுக்கும் ஒரு பிரிவினருக்கு இமாமாக நின்று தொழவைக்கும் மனிதன், கணவனின் வெறுப்பைச் சம்பாதித்தவளாக இரவைக் கழிக்கும் பெண், தம்மிடையே தொடர் பைத் துண்டித்து வெறுப்புடன் உள்ள இரு சகோதரர்கள் என்பவர் களே அவர்களாவர். (ஸுனன் இப்னு மாஜா, ஸஹீஹ் இப்னு ஹிப்பான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர உணர்வு அற்றுப் போகும்போது தொழுகையும் அங்கீகரிக்கப் படாத நிலை தோன்ற முடியும். கிடைக்கவுள்ள பாவமன்னிப்பும் கிடைக்காமல் போகலாம் என இங்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

முஸ்லிம் சமூகம் சகோதர உணர்வோடு ஒற்றுமையாக வாழ்வது ஒரு பெரும் கடமை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இந்தச் சகோதர உணர்வு பாதிக்கப்படாத வகையிலேயே நமது எல்லா நடவடிக்கை களையும் இயன்றளவு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை சகோதரத்துவத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் காட்டுகிறது.

அல்குர்ஆனும், ஸுன்னாவும் சகோதர உணர்வு பாதிக்கப்படாத வகையில் சமூகத்தில் பிளவுகள் உருவாகாத வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளன. அல்குர்ஆன் மூஸா(அலை) அவர்களது வரலாற்றை பல அத்தியாயங்களில் மிக விரிவாக விளக்கு கிறது. வரலாற்று நிகழ்வுகள் விளக்கப்படுவதன் நோக்கமே முஸ்லிம் சமூகம் அவற்றிலிருந்து படிப்பினை பெறவேண்டும் என்பதுதான். அந்த வகையில் மூஸா(அலை) அவர்களது காலத்தில் நடந்த ஒரு நிகழ்வை இங்கே தருவது பொருத்தமாக அமையும் என நம்புகிறோம்:

மூஸா(அலை) அல்லாஹ்வின் வழிகாட்டுதலைப் பெறச் சென்று விடுகிறார்கள்; அவர்களுடைய பிரதிநிதியாக பனூஇஸ்ரவேலர்களுக்கு மத்தியில் ஹாரூன்(அலை) இருக்கிறார்கள். இந்நிலையில் சாமிரி என்பவன் தங்கத்தால் ஒரு மாடு செய்து பனூ இஸ்ரவேலர்களில் ஒரு பிரிவினரை படிப்படியாக அதனை வணங்கச் செய்துவிடுகிறான். மூஸா(அலை) திரும்பி வருகிறார்கள். நிலைமையைக் கண்ணுற்றதும் கடும் கோபமடைகிறார்கள்; சகோதரரைக் கடிந்து கொள்கிறார்கள். அப்போது ஹாரூன்(அலை) தமது சகோதரர் மூஸா(அலை) அவர் களைப் பார்த்து கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

''என் தாயின் மகனே! என் தாடியையோ, தலையையோ பிடித்து இழுக்காதீர்கள். பனூஇஸ்ரவேலர்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்திவிட்டீர், நான் சொன்னதை நீர் கவனத்தில் கொள்ள வில்லை என்று நீங்கள் சொல்வீர்களோ என நான் பயந்தேன்.'' (தாஹா: 94)

இந்த வசனம் இணைவைப்பு(ஷிர்க்) போன்ற ஒரு தீமையை எதிர்க்கும்போதுகூட எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதையே காட்டுகிறது. ஹாரூன்(அலை) இணைவைப்பு என்ற தீமை நடக்கும்போது கைகட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பது இதன் பொருளல்ல. அவர்கள் அத்தீமையை எதிர்த்தார்கள். அவர்கள் மூஸா(அலை) வரும் வரை பொறுத்தார்கள். மூஸா(அலை) தலைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனூஇஸ்ரவேலர்கள் பொதுவாக ஏற்றிருந்தனர். எனவே. பிரச்சனையை அவர் மூலம் தீர்ப்பது எளிது என ஹாரூன்(அலை) கண்டார்கள். அவசரப்பட்டு தாமாகத் தீர்க்க முயன்றால் அது சமூகப் பிளவுக்கு வழி வகுக்கும். மாட்டை வணங்குபவர்கள் இறுதிவரை அந்த நிலைப் பாட்டிலேயே இருந்து விடுவார்கள் எனப் பயந்தார்கள். இதனையே மேற்கூறிய வசனம் காட்டுகிறது. எனவே சமூகம் பிளவுபட்டு பிரிந்து செல்லாது பார்த்துக்கொள்ளல் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் விளக்குகிறார்கள்:

''அல்குர்ஆனை அதன் மீது உங்கள் உள்ளங்கள் ஒற்றுமைப் பட்டிருக்கும் வரை ஓதுங்கள். நீங்கள் கருத்து வேறுபாடுற்றால் எழுந்து விடுங்கள்.'' (ஸஹீஹ் புகாரி, முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்)

அல்குர்ஆனின் எழுத்தொன்றை ஓதுவது குறித்தோ, அல்லது அல்குர்ஆன் வசனங்கள் தரும் பொருள்பற்றியோ உங்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றினால் எழுந்து விடுமாறு இறைத்தூதர்(ஸல்) இங்கு கூறுகிறார்கள். அல்குர்ஆனை ஓதுதல் ஒரு ஸுன்னத்தான வணக்கம். கருத்து வேறுபாடு தோன்றினால் அதனை ஓதுவதை விட்டு எழுந்து விடுதல் சிறந்தது என்று இறைத்தூதர்(ஸல்) கூறுவது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

நபித்தோழர்கள், தாபிஈன்கள், ஆரம்பகால இமாம்கள் இந்த ஸுன்னாவையே பின்பற்றினர். அவர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஆனால் அவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. கருத்து வேறுபாடு தோன்றுவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் புரிந்திருந்தனர். எனவே அடுத்தவரின் கருத்தை மதித்தனர்; விட்டுக் கொடுத்தனர்; கருத்து வேறுபாடு உள்ளவரை ஏற்றனர்; தன் சொந்த முஸ்லிம் சகோதரராகவே கருதினர்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களது மரணத்தின் பின் தலைவராக யார் வரவேண்டும் என்பதில் கருத்து வேறுபட்டனர். மிகுந்த கவனமாக அது குறித்து விவாதித்தனர். உண்மை துலங்கியபோது ஓர் உடன்பாடான கருத்திற்கு வந்தனர். இப்னு மஸ்ஊத்(ரழி) அவர்களுக்கும் உமர்(ரழி) அவர்களுக்குமிடையே ஏறத்தாழ 100 விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்ததாகக் கூறும் இமாம் இப்னுல் கையும் அவற்றில் நான்கை தமது 'இஃலாமுல் முவக்கயீன்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். நபித் தோழர்களுக்கு மத்தியில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகளை இங்கு விவரிக்க முயன்றால் மிகவும் விரிவுபட்டுச் சென்றுவிடும். இங்கு நாம் குறிக்கவருவது என்னவெனில் கருத்து வேறுபாடுகள் என்பது நபித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்கள் காலத்திலிருந்து தோன்றுகிறது. ஆனால் அது அவர்களைப் பிளவுபடுத்தவில்லை. மிகுந்த சகோதர உணர்வுடனேயே அவர்கள் வாழ்ந்தனர். இந்த மனப்பாங்கைப் புரிந்துகொள்வது மிக முக்கியமானது என்பதையே இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

கருத்து வேறுபாடுகள் மோசமான விளைவுகளைத் தர சட்டப் பகுதியில் கருத்துவேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை என்பதை ஏற்றுக் கொள்ளாமை ஒரு காரணம் என்பதுபோல கருத்து வேறுபாட்டிற் கான ஒழுக்கங்கள் பேணப்படாமையும் ஒரு காரணமாகும்.

அந்த ஒழுக்கங்களில் மிக முக்கியமானது மனோஇச்சையின் காரணமாகக் கருத்துவேறுபாடுகள் தோன்றிவிடக் கூடாது என்பதாகும். மனோஇச்சை கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாயின் அது அறிவு பூர்வமான கலந்துரையாடல்களால் கூடத் தீர்க்க முடியாததாகும். குறிப்பிட்ட நபர் தன் கருத்திலேயே மிகுந்த பிடிவாதமாக இருப்பார்.

அடுத்த முக்கிய காரணம் கண்மூடிப் பின்பற்றலாகும். தான் சார்ந் திருக்கும் மத்ஹப் சிந்தனைப் பிரிவு சார் கருத்துகளை முழுமையாகப் பின்பற்றுவதோடு அவை முழுமையாகச் சரி, மற்றவை அனைத்தும் தவறானவை என்ற மனப்பாங்கு இவரிடம் தோன்றும். எனவே, மாற்றுக் கருத்து கொண்டவர்களோடு நெருங்குவது இத்தகையவருக்கு மிகுந்த சிரமமாக அமையும்.

இறுதியாக கருத்தை மட்டும் நோக்குவதோடு நில்லாது கருத்தைச் சொன்ன நபரையும் விமர்சிக்க, குறை கூற முயல்வதை அவதானிக் கலாம். இங்கு ஏசுதல், புறம், கோள், இழிவுபடுத்தல், பரிகசித்தல் போன்ற அனைத்து மோசமான பண்புகளும் இணைந்துகொள்ளும். இந்நிலையில் கருத்து வேறுபாடு கொண்ட இருவருக்குமிடையிலான தூரம் அதிகரித்துச் செல்லும். தொடர்ந்து பிளவும் பிரிவினையும் தோன்றும்.

கருத்து வேறுபாடுகள் தூய்மையாகவும், பண்பாட்டுடனும் காணப் படுமானால் சட்டப் பகுதியைப் பொறுத்தவரையில் பல நல்ல விளைவுகளை அது கொடுக்கும். அவற்றைக் கீழே சுருக்கமாகத் தருகிறோம்:

1. ஆதாரத்தின் பல்வேறு பக்கங்களை அறிந்து கொள்ள அது உதவும். அதாவது குறிப்பிட்ட ஒரு ஆதாரம் பல கோணங்களிலிருந்து நோக்கப்பட முடியும். அதனூடாக அதற்குப் பல பொருள்கள் பட முடியும் என்பதை அறிதல்.

2. அறிவுக்கு ஒரு பயிற்சியாகவும், பல கருத்துகளின் சந்திப்பாகவும் இது அமைவதோடு பல சிந்தனைப் பகுதிகளை இது திறந்து விட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நிகழ்வுக்கான பல தீர்வுகள் இங்கு முன்வைக்கப்படுகிறது. அதன் மூலம் தாமிருக்கும் நிலையைப் பொறுத்து ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கருத்து வேறுபாடுகள் இயல்பானவை; தவிர்க்க முடியாதவை. இந்த உண்மையை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டுவதே இந்த நூலின் நோக்கமாகும்.

இனி அந்தக் கருத்து வேறுபாடுகளோடு கவனமாக உறவாடுவதும், நெறிப்படுத்திக் கொள்வதுமே நமக்கு முன்னே உள்ள பணியாகும். கருத்து வேறுபாடுகள் தூய்மையான ஆய்வின் ஊடே தோன்றி, ஆரோக்கியமான மட்டத்தில் சுழலுமானால் மேற்குறிப்பிட்ட நல்ல பயன்களை அது கொடுக்க முடியும்.

கருத்து வேறுபாடுகளை அந்தவகையில் நெறிப்படுத்துவதே நமது பெரிய பொறுப்பாகிறதே தவிர அவற்றை ஒழிக்க முற்படுவது அல்ல. கருத்து வேறுபாடுகளை ஒழிப்பதில் தீவிர உணர்வுடன் செயல்படும் போதுதான் சமூகப் பிளவுகள் தோன்றுகின்றன. இந்த வகையில் ஒரு முக்கிய பிரச்சனையை வாதிக்க சமூக மட்டத்திற்கு இந்த நூலை அனுப்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து வேறுபாடுகள்: ஓர் அறிமுகம்

இஸ்லாமியச் சட்டக்கலையில் இஜ்திஹாதை அடிப்படையாகக் கொண்டு கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றன. இறைத்தூதர்(ஸல்) அவர்களது காலத்தில் கருத்து வேறுபாடுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு வஹீ இறங்கிக் கொண்டிருந்தமையால் இஜ்திஹாத் பெரும்பாலும் அவசியப்படாமல் இருந்தமையே இதற்குக் காரணமாகும்.

ஆனால், பிற்காலத்தில், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மரணத்தை அடுத்து கருத்து வேறுபாடுகள் வளரலாயின. பல நாடுகளுக்கு நபித் தோழர்கள் பிரிந்து சென்று வாழத் துவங்கியமை இக்கருத்து வேறுபாடுகள் மேலும் விரிவடையக் காரணமாயிற்று.

வஹீ இறங்குவது நின்றுவிட்ட அதே வேளையில், அல்குர்ஆன் வசனங்களின் கருத்துகளை நன்கு அறிந்திருந்த நபித்தோழர்கள், பல்வேறு நாடுகளுக்கும் பிரிந்தபோது சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் விரிவடைவது இயல்பேயாகும். ஏனெனில், இக்கருத்து வேறுபாடுகள் இரண்டு முக்கியமான அடிப்படைகளைக் கொண்டனவாகும்:

1. அல்குர்ஆன், ஹதீஸ்களில் வரும் சட்ட வசனங்கள் பல கருத்துகளைக் கொடுக்கக் கூடியனவாக இருந்தமை.
2. அறிவுத் தரமும், விளங்கும் ஆற்றலும் வித்தியாசமாகக் காணப் படுகின்றமை.

அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் வரும் பல வசனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல கருத்துகளைக் கொடுக்கக் கூடியவை. இதிலிருந்து, இவ்வாறு இறக்கி வைப்பது அல்லாஹ்வின் நோக்கமாக இருந்தது என்பது நமக்குத் தெளிவாகிறது. அத்தோடு ஒரு சொல் பல பொருள்களைக் கொண்டதாக அமைந்திருப்பது அரபு மொழியின் தனித்துவமான பண்பாகும்.

மேலும் மனிதனுடைய சிந்தனா ஆற்றலையும் ஏற்றத்தாழ்வாக, பல தரங்களாக அல்லாஹ் அமைத்துள்ளான். இது இறைவனின் படைப்பில் வெகுசாதாரணமாகக் காணப்படும் ஓர் அம்சமாகும்.

இவ்விரு அம்சங்களும் கண்டிப்பாக சட்டங்களிலே கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. இதனை நாம் கீழ்வரும் சமன்பாட்டினூடாக விளக்கலாம்:

1. பல பொருள்கள் கொடுக்கும் அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் + அறிவுத்தர வேறுபாடுகள் = கருத்து வேறுபாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரே பொருளையே கொடுக்கும் திட்ட வட்டமான அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் + ஏற்றத்தாழ்வற்ற அறிவுத்தரங்கள் = ஒற்றுமை யான கருத்துகள்(கருத்து வேறுபாடின்மை).

இவ்விரு அடிப்படைகளையும் மறந்ததன் காரணமாகத்தான் மத்ஹபுகள் அனைத்தையும் ஒன்றிணைக்க வேண்டும், கருத்து வேறுபாடுகளைக் களைந்து, ஓரே கருத்துடன் வாழவேண்டும் என்ற கருத்துகள் தோற்றம் பெற்றன.

உண்மையில், கருத்து வேறுபாடுகளை ஒழிப்பது என்பது சாத்திய மற்றதொன்றாகும். சட்டங்களில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் இயல்பானவை; தவிர்க்க முடியாதவை.

அல்லாஹ் விரும்பியிருந்தால் மக்கள் அனைவரையும் ஒரே சிந்தனைத் தரத்தோடும், ஒரே வகையான அறிவு, ஆற்றல்களோடும் படைத்திருப்பான். அல்குர்ஆனையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறும் வசனங்களோடு, தெளிவாக, விளக்கமாக இறக்கியிருப்பான். ஆனால் காரணத்துடனேயே அவ்வாறு செய்யவில்லை எனும் உண்மையை சட்டத்துறையில் கருத்து வேறுபாடுகளை ஒழித்து ஒரே மத்ஹபைத் தோற்றுவிக்க விரும்பும் மனிதர்கள் மறந்துவிட்டார்கள் போலும்.

மார்க்கச் சட்டங்கள் கருத்து வேறுபாடுகளோ அல்லது முரண்பாடு களோ ஏதுமின்றிக் காணப்பட வேண்டும் என அல்லாஹ் விரும்பி இருந்தால் அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்களின் தற்போதைய போக்கையும் மாற்றி, மனிதனில் காணப்படும் அறிவுத் தர வேறுபாடுகளையும் நீக்கி இருப்பான்.

எடுத்துக்காட்டாக, அத்தியாயம் அல்-பகராவில் வரும் கீழ்வரும் வசனத்தை நோக்குவோம்:

''தலாக் கூறப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய் காலம்(குர்உ) பொறுத்திருக்க வேண்டும்.''

இந்த வசனத்தை அதற்கு இரண்டு வசனங்களுக்கு முன்னே உள்ள அதே அத்தியாயத்தின் இன்னொரு வசனத்தோடு ஒப்பிட்டு நோக்குவோம்:

''தங்களது மனைவிமார்களை விட்டு பிரிந்து வாழ்வோம் என்று சத்தியம் செய்பவர்களின் பெண்கள் நான்கு மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும்.'' (2:226)

இவ்விரு வசனங்களையும் நோக்கினால் முதலாவது வசனத்தில் மூன்று மாதவிடாய் காலம்(குர்உ) என்றும், இரண்டாவது வசனத்தில் நான்கு மாதங்கள் என்றும் வந்துள்ளன. இவ்விரண்டு வசனங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே 'மூன்று' 'நான்கு' என்று வந்துள்ள சொற்களில் இரு கருத்துகளுக்கு இடமில்லை. அவை ஒரே கருத்தைக் கொடுக்கக்கூடிய திட்டவட்டமான இரண்டு சொற்களேயாகும்.

ஆனால், முதலாவது வசனத்தில் வந்துள்ள 'குர்உ' என்ற சொல்லையும் இரண்டாவது வசனத்திலுள்ள 'அஷ்ஹுர்' (மாதங்கள்) என்ற சொல்லையும் எடுத்து நோக்கினால் 'குர்உ' என்ற சொல் பல கருத்துகளைக் கொடுக்கக் கூடியதாகவும் அஷ்ஹுர் என்ற சொல் 'மாதங்கள்' என்ற ஒரே கருத்தையே கொடுப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

'குர்உ' என்ற சொல்லை விளக்கும்போது அபூ அம்ர் இப்னு அலா பின்வருமாறு கூறுகிறார்:

''அரபிகளில் சிலர் மாதவிடாய்க்கு 'குர்உ' என்று கூறுவார்கள். இன்னும் சிலர் மாதவிடாயிலிருந்து தூய்மைப் படுவதற்கு 'குர்உ' என்று கூறுவார்கள். வேறு சிலர் மாதவிடாயையும், அதிலிருந்து தூய்மையாவதையும் சேர்த்தே 'குர்உ' என்பர்.''[1]

அபூபக்ர் அல் ஜஸ்ஸாஸ் இதனை விளக்கும்போது அஹ்காமுல் குர்ஆன் என்ற தமது நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

''குர்உ என்ற சொல் மாதவிடாய், மாதவிடாயிலிருந்து தூய்மை அடைதல் என்ற இரு கருத்துகளில் அரபு மொழியில் பயன்படுத்தப் படுகிறது என்பதில் ஆரம்பகால அறிஞர்கள் (ஸலபுகள்) ஒரே கருத்தைத் தெரிவிக்கிறார்கள். இதனை நாம் இரண்டு வழிகளில் விளங்கிக் கொள்ளலாம்:

1. ஸலபுகள்( நபித்தோழர்கள், தாபிஈன்கள், அறிஞர்கள்) 'குர்உ' என்ற சொல் இவ்விரு கருத்துகளையும் கொடுக்காவிட்டால் அந்த வசனத்தை அவ்விரு கருத்துகளினதும் அடிப்படையில் விளக்கி இருக்கமாட்டார்கள்; ஏனெனில், அவர்கள் அரபு மொழி, அவற்றின் பயன்பாடுகள் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ளவர்களாவர்.

2. இது பற்றி கருத்து வேறுபாடு ஸலபுகளிடையே பரவலாகக் காணப்பட்டது. அத்தோடு தமக்கெதிரான கருத்து கொண்டோரை எதிர்த்து, அவர்களது கருத்து அடிப்படையிலேயே பிழையானது என்று மறுக்கவில்லை. மாறாக அவ்வாறு இஜ்திஹாத் செய்வது சரியானது என்று அவர்கள் ஏற்றுக்கொண்டனர். எனவே. குர்உ என்ற சொல் பல கருத்துகளைக் கொடுக்கக் கூடியது என்பது தெளிவாகிறது.[2]

எனவே, 'மூன்று மாதவிடாய்கள்' என்று வந்த முதலாவது திரு வசனத்திலே அறிஞர்கள் கருத்து வேறுபடுவதும், 'நான்கு மாதங்கள்'

---

1. தப்ஸீர் அல்-குர்துபி, தொகுதி 1, பக். 113.
2. அஹ்காமுல் குர்ஆன், தொகுதி 1, பக். 430.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வந்த இரண்டாவது வசனத்தில் கருத்தொற்றுமைப் படுவதும் இயல்பானதேயாகும்.

இது பற்றி இமாம் குர்துபி பின்வருமாறு கூறுகிறார்:

''அறிஞர்கள் 'குர்உ' பற்றி கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளனர். கூபாவாசிகள் இதற்கு மாதவிடாய் என்று கருத்து கொடுத்தார்கள். இதுவே உமர், அலீ, இப்னு மஸ்ஊத், அபூ மூஸா, முஜாஹித், கதாதா, லஹ்ஹாக், இக்ரிமா, ஸுயூத்தி போன்றோரது கருத்துமாகும்.''

''ஹிஜாஸிகள் இதற்கு 'மாதவிடாயிலிருந்து தூய்மையாதல்' என்று கருத்து கொடுத்தார்கள். ஆயிஷா, இப்னு உமர், ஸைத் இப்னு தாபித், ஜுஹ்ரி, அபான் இப்னு உஸ்மான், இமாம் ஷாபிஈ போன்றோர் இக்கருத்தைக் கொண்டிருந்தனர்.''[3]

அல்லாஹ் இந்த விடயத்தில் கருத்து ஒற்றுமை காணப்பட வேண்டும் என விரும்பியிருந்தால், அடுத்த வசனத்தில் 'நான்கு மாதங்கள்' என்று வந்திருப்பது போன்று மூன்று மாதவிடாய் அல்லது மூன்று மாத விடாயிலிருந்து தூய்மையாதல் என்று தெளிவாகச் சொல்லியிருப்பான். இவ்வாறே நாம் ஏனைய பல குர்ஆன் வசனங்களையும் ஒப்பிட்டு நோக்கலாம்.

சட்டம் பற்றிய வசனங்களில் அதிகமானவை கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிப்பதாக இருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. பல கருத்துகளுக்கு இடம் கொடுத்து, மக்களுக்குச் சட்டங்களில் விரிந்த வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அல்லாஹ் விரும்பியிருக்கிறான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அத்தோடு மனிதனுக்கு ஆராய்வதற்கான இடத்தைக் கொடுக்க வேண்டுமென அல்லாஹ் விரும்பியுள்ளான் என்பதும் இதிலிருந்து புலப்படுகிறது.

இந்த இறைநோக்கத்தைப் பல அறிஞர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக இமாம் ஸர்கஷி பின்வருமாறு கூறுகிறார்:

''அல்லாஹ் எல்லாச் சட்டங்களுக்கும் திட்டவட்டமான கருத்துகளைக் கொடுக்கும் வசனங்களை இறக்கி வைக்கவில்லை; மாறாக பல கருத்துகளுக்கும் இடம் கொடுக்கக் கூடிய வசனங்களையே இறக்கியுள்ளான். சட்டங்களைப் பின்பற்றும் மக்களுக்கு இதனால் வசதிகள் பல உருவாகும் என்பதே இதன் நோக்கமாகும். திட்டவட்டமான கருத்தைக் கொடுக்கும் வசனங்களை இறக்கி, ஒரே மத்ஹபில் மக்கள் அனைவரும் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென அல்லாஹ் விரும்பவில்லை, என்பதை இது காட்டுகிறது.''[4]

---

3.தப்ஹீம் அல்குர்துபி, தொகுதி 3, பக். 113.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போதும், அவர்களது மறைவின் பின்னரும் நபித்தோழர்களிடையே சட்டங்களில் கருத்துவேறுபாடுகள் காணப்பட்டன. எனவே, சட்டங்களில் காணப் படும் கருத்து வேறுபாடுகள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வருகின்றன. இதற்கு நாம் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்:

1. பனூ குறைழாக்களோடு போருக்குக்குச் செல்லும்போது வழியில் தொழுகையைப் பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடு: இச்சம்பவத்தை இமாம் புகாரி, இப்னு உமர் அறிவிப்பதாக பின்வருமாறு அறிவிப்புச் செய்கிறார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அகழிப் போர் நாளன்று பின்வருமாறு கூறினார்கள்: ''பனூ குறைழாக்களின் பூமியிலே அஸரை அனைவரும் தொழவேண்டும்.'' பாதையிலே அஸருக்கான நேரம் வந்ததும், அவர்களில் சிலர் நாம் அங்கு போய்த்தான் தொழ வேண்டும் என்றனர்; வேறு சிலர் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அந்தக் கருத்தில் கூறவில்லை, என்று கூறி செல்லும் வழியிலேயே அஸரைத் தொழுது கொண்டனர். இது இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் யாரையும் கண்டிக்கவில்லை''.[5]

2. அபூ ஸயீத் அல் குத்ரி அறிவிக்கிறார்கள்: ''நபித்தோழர்கள் இருவர் பயணம் செய்தனர். பயணத்தின்போது தொழுகையின் நேரமாகியது. ஆனால் வுளூ செய்வதற்கான நீர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே இருவரும் சுத்தமான மண்ணால் தயமம் செய்து தொழுதனர். பின்னர் அத்தொழுகைக்குரிய நேரத்திலேயே இருவருக்கும் நீர் கிடைத்தது. அவர்களில் ஒருவர் மீண்டும் வுளூச் செய்து தொழுகை யையும் மீட்டித்தொழுதார். ஆனால், மற்றவர் மீட்டித் தொழ வில்லை. இதனை அவர்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து கூறினர். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள், தொழுகையை மீட்டித் தொழாதவரைப் பார்த்து 'நீர் ஸுன்னாவின் படியே நடந்து கொண்டீர்; உமது தொழுகை நிறைவேறிவிட்டது' என்றார்கள். தொழுகையை மீட்டித் தொழுத மற்றவரைப் பார்த்து 'உமக்கு இரண்டு முறை கூலி உண்டு' என்று கூறினார்கள்.'' (அபூதாவூத், நஸாயீ)

இது, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் காலத்திலேயே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டிற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மறைவின் பின் நபித்தோழர்களிடையே

4. தஸ்ஹீலுல் உஸூல் அல்-மஹ்லாவி, பக். 240.

5. பத்ஹுல் பாரீ. தொகுதி 1, பக். 411.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் பற்றிய கருத்து வேறுபாடுகள் மிக அதிகமாகத் தோன்றின. முஜ்தஹிதுகளாகிய இமாம்களின் கருத்துவேறுபாடுகளுக்கு பெரும்பாலும் நபித்தோழர்களின் கருத்து வேறுபாடுகளே அடிப்படையாக இருந்தன. அடிப்படையான இஸ்லாமியச் சட்ட நூல்களை மேலோட்டமாக வாசிக்கும் ஒருவர்கூட நபித்தோழர்களிடையே சட்டரீதியான கருத்து வேறுபாடுகள் அதிகமாகக் காணப்பட்டன என்பதை இலகுவில் உணர்ந்து கொள்வார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் கலீஃபாவை நியமிப்பதில் நபித்தோழர்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடே இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் தோன்றிய முதலாவது கருத்து வேறுபாடு என நாம் கூறலாம். பின்னர் பல்வேறு பட்ட காரணங்களினாலும் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டு சென்றன.

நபித்தோழர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்:

**அ. பாட்டனின் வாரிசுரிமை**

மரணமடைந்தவரின் சகோதரர்களோடு பாட்டனாரும் இருந்தால் சகோதரர்கள் தமது வாரிசுரிமைப் பங்கை இழப்பர். பாட்டனாருக்கே அப்பங்கு கிடைக்கும். இந்த வகையில் பாட்டனார், இறந்தவரின் தந்தையை ஒத்தவராகிறார். இதற்கான காரணம் தந்தை(அபுன்) என்ற சொல் குர்ஆனில் பாட்டனுக்கும், தந்தைக்கும் பொதுவாகப், பயன்படுத்தப்பட்டிருப்பதேயாகும். இதுவே பாட்டனின் வாரிசுச் சொத்துரிமை பற்றிய இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களின் கருத்தாகும்.

உமர், அலீ, ஸைத் (ரலி) போன்ற ஏனைய நபித்தோழர்கள் இதற்கு மாற்றமாக பாட்டனாரோடு இறந்தவரின் சகோதரர்கள் வாரிசுச் சொத்திலே பங்குபெறுவர். பாட்டனாரும், சகோதரர்களும் சொத்தைக் குறிப்பிட்ட விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்வர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஏனெனில் இவர்கள் அனைவரும் மரணமடைந்த வரோடு தந்தைவழித் தொடர்பைக் கொண்டுள்ளனர்; தந்தையும், பாட்டனாரும் எல்லா வகையிலும் ஒரே கருத்தைக் கொண்டவர்களல்ல என இவர்கள் விளக்குகின்றனர்.

**ஆ. தலாக் செய்யப்பட்ட பெண்ணின் இத்தா**

இது முடிவடைவது குறித்தும் நபித்தோழர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. மூன்றாவது மாதவிடாய் முடிவடைந்து, குளித்துத் தூய்மை அடைந்ததும்தான் இத்தகைய பெண் இத்தாவிலிருந்து நீங்குகிறாள் என்பது இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸைத் (ரலி) அவர்கள் போன்ற ஏனையோர், அப்பெண் மூன்றாவது மாதவிடாய் காலத்தை எய்தியதுமே இத்தாவிலிருந்து நீங்கி விடுகிறாள் என்று கூறுகின்றனர். 'குர்உ' என்ற சொல்லின் கருத்து பற்றி ஏற்பட்ட வேறுபாடே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

**இ. கணவன் இறந்த, கர்ப்பவதியான ஒரு பெண்ணின் இத்தா**

இது குழந்தை பிறப்பதோடு முடிவடைகிறது என்பது உமர், இப்னு மஸ்ஊத் (ரலி) போன்றோரின் கருத்தாகும். அலீ, இப்னு அப்பாஸ் (ரலி) போன்றோர் கூடிய காலத்தை அவதானித்து, அக்கூடியகால அளவுவரை இத்தா இருக்க வேண்டும் என்றனர். (அதாவது கணவன் இறந்தால் ஒரு பெண் 4 மாதம் 10 நாட்கள் இத்தா இருக்க வேண்டும். ஆனால் கர்ப்பவதியாக இருக்கும் ஒரு பெண் பிள்ளை பெறுவதற்கு இருக்கும் காலத்தையும், இத்தா காலத்தையும் ஒப்பிட்டு நோக்கி, எது கூடுதலாக இருக்கிறதோ அந்த அளவு இத்தா இருக்க வேண்டும் என்பது அவர்களது கருத்தாகும் - மொழிபெயர்ப்பாளர்).

இவ்வாறு இன்னும் பல கருத்து வேறுபாடுகளை நாம் நபித் தோழர்கள் காலத்திலேயே அவதானிக்கலாம்.

இவ்வாறு நபித்தோழர்கள்[1] காலத்தில் சட்டத்துறையில் கருத்து வேறுபாடுகள் விரிவடைந்து தாபிஈன்கள்[2], தபஉத் தாபிஈன்கள்[3] காலத்தில் மேலும் வளர்ச்சியடைந்தது. புதுப்புது நிகழ்ச்சிகள், பிரச்சனைகள், சூழ்நிலைகள் தோன்றியமை இதற்கான சில காரணங்களாகும்.

எனவே இஸ்லாமியச் சட்டங்களில் விரிந்த கருத்து வேறுபாடுகள் தோன்றியமை இயல்பான ஓர் அம்சமாகும். நடைமுறை வாழ்வு, அறிவுலக வாழ்வு இவ்விரண்டையும் ஒட்டி வளர்ந்த இயல்பான கருத்து வேறுபாடுகளே இவையாகும்.

1. நபித்தோழர்கள்: இறைத்தூதர்(ஸல்) அவர்களைக் கண்டு, பின்பற்றியவர்கள்.
2. தாபிஈன்கள்: நபித்தோழர்களை கண்டு, அவர்களைப் பின்பற்றியவர்கள்.
3. தபஉத் தாபிஈன்கள்: தாபிஈன்களைக் கண்டு, அவர்களைப் பின்பற்றியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து வேறுபாட்டிற்கான காரணங்கள்

குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் சட்டங்களைப் பெறுவதில் கருத்து வேறுபாடு கொள்வதும் ஒரே பிரச்சனை பற்றி பல்வேறுபட்ட கருத்துகளை அறிஞர்கள் கொண்டிருப்பதும் இயல்பானதே. இக்கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் காரணிகளை நாம் முன்னைய கட்டுரையில் நோக்கினோம்.

எனினும் குறுகிய சிந்தனைப் போக்குடைய சிலர் சட்டங்களில் இத்தகைய கருத்து வேறுபாடுகளைக் காணும்போது ஆச்சரியப்படு கின்றார்கள். வேறு சிலரோ சட்டங்களைப் பற்றிச் சந்தேகம் கொண்டு விடுகின்றனர்.

குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் போதுமான அளவு இருக்குமானால் கருத்து வேறுபாடுகளுக்கு இடமே இல்லை என்ற நம்பிக்கையே இவர்களது இந்த வரம்பு மீறிய போக்குக்குக் காரணமாக இருக்கலாம். குறிப்பிட்ட சட்ட வசனம் ஆதாரபூர்வமாக 'உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' அல்லது 'உறுதிப்படுத்தப்படவில்லை' ஆகிய இரண்டு மட்டுமே கருத்து வேறுபாடுகள் தோன்றக் காரணமாக இருக்க வேண்டும். வேறு எக்காரணமும் இருக்க முடியாது என்று இவர்கள் எண்ணுகிறார்கள் போலும்! இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஸுன்னா அதாவது ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டு அவை உண்மையானவை(ஸஹீஹ்), பலஹீனமானவை (ழஈப்) எனப் பிரிக்கப்பட்டுவிட்டால் சட்டங்களுக்கான மூலாதாரங்கள் தயாராகிவிடும். எனவே, கண்டிப்பாகக் கருத்து வேறுபாடுகள் நீங்கிவிட வேண்டும். பல்வேறுபட்ட கருத்துகள் தோன்றுவது அவசியமில்லை என இவர்கள் எண்ணுகின்றனர்.

சட்டங்களில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் பற்றிய மேம்போக் கானதும் பிழையானதுமான இக்கண்ணோட்டம் பல மோசமான நிலைமைகளைத் தோற்றுவித்ததும் உண்டு. இக்கருத்து வேறுபாடு களைப் பாரதூரமானதாகவும், சகிக்க முடியாததாகவும் கண்ட சிலர் இவற்றைப் புறக்கணிக்கின்றனர். வேறு சிலரோ கருத்து வேறுபாடுகள் இருக்கவே கூடாது எனப் புரட்சிக் கொடி தூக்கிப் போராடவே கிளம்பி விடுகின்றனர்.

ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டு விட்டன. ஹதீஸ் நூல்கள் எல்லோரது கைகளுக்கும் கிட்டும் வகையில் எங்கும் பரவிவிட்டன. எனவே, 'குர்ஆன்-ஸுன்னாவின் மத்ஹபு' என்ற வகையில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் ஒரே மத்ஹபில் ஒன்று சேர்க்கலாம் என வேறு சிலர் பிரச்சாரம் செய்ய முற்பட்டுவிட்டனர். 'மார்க்கம் ஒன்றே, குர்ஆனும் ஒன்றே, ஸுன்னாவும் ஒன்றே. எனவே இந்தக் கருத்து வேறுபாடுகள் ஏன் நிலவ வேண்டும்?' என்று இவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமும் கூறுகின்றனர்.

இவர்கள் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் ஏன் தோன்றின என்பதை விளக்கும் அறிஞர்களின் நூல்களை நோக்க மாட்டார்களா? ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் அறிஞர்களிடையே போய்ச் சேர்வதாலும், சேராதிருப்பதாலும்தான் கருத்து வேறுபாடுகள் தோன்றின என இவர்கள் கூறும் இக்காரணம் உண்மையில் பல முக்கியமான காரணங்களில் ஒரு சிறிய காரணமே என்பது இவர்களுக்கு அப்போது தெரிய வந்துவிடும்.

சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களை அறிஞர்கள் பலர் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்கள்.

அவர்களுள் சிலர் சுருக்கமாகவும் வேறு சிலர் மிக விரிவாகவும் இவற்றை விளக்கியுள்ளனர். கருத்து வேறுபாடுகளுக்கான காரணங்கள் அதிகமாகவும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புபட்டனவாகவும் காணப்படுவதுமே இவ்வாறு சுருக்கமாகவும் விரிவாகவும் அவை எழுதப்படக் காரணமாகும். அறிஞர்கள் விளக்கியவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது கருத்து வேறுபாட்டுக்கான காரணங்கள் நான்கு அடிப்படைகளைக் கொண்டிருப்பதையும் அவற்றிலிருந்தே ஏனைய துணைக் காரணங்கள் பிரிந்து செல்வதையும் காணலாம். எனவே, அந்நான்கு அடிப்படைகளையும் இப்போது நோக்குவோம்.

1. ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் உறுதிப்படுத்தப்படுவதும் உறுதிப்படுத்தப் படாமையும்

ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் ஓர் இமாமுக்குக் கிடைத்திருக்கும். மற்றோர் இமாமுக்குக் கிடைத்திருக்காது. சிலபோது அப்படிக் கிடைத்திருந்தாலும் அந்தக் குறிப்பிட்ட ஹதீஸ் அவ்வரைப் பொறுத்தவரை ஆதாரபூர்வமாக இருக்காது. மற்றவர் அதனை ஆதாரபூர்வமானதாகக் கருதியிருப்பார். இதற்குக் காரணம் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் நிலை, தகைமை பற்றிய ஆய்வில் ஏற்படும் கருத்து வேறுபாடாகும். அல்லது ஹதீஸ் அறிவிப்பாளர்கள் அனைவரும் இமாம்களால் ஏற்கப்பட்டாலும் குறிப்பிட்ட ஹதீஸின் வசனம்(text) அல்லது அதன் அறிவிப்பாளர் வரிசை ஒப்பிட்டு நோக்கப்படும்போது அது 'ஷாத்'* ஆக ஓர் இமாமினால் கணிக்கப்பட மற்றவரால் அவ்வாறு கணிக்கப்படாது விடலாம். இவ்வாறு ஹதீஸ் ஆதாரபூர்வமானது என்று கணிக்கப்படும் கலையோடு சம்பந்தப்பட்ட இன்னும் பல காரணங்கள் இருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சட்ட வசனத்தை [நஸ்ஸுன்] விளங்குவதில் ஏற்படும் வேறுபாடு

ஏற்கனவே குறிப்பிட்ட விடயங்கள் அனைத்திலும் இமாம்கள் அனைவரும் கருத்தொற்றுமை உடையவர்களாக இருக்கின்றார்கள் என நாம் வைத்துக் கொள்வோம். என்றாலும்கூட குறிப்பிட்ட சட்ட வசனத்தை விளங்கிக் கொள்வதில் அவர்களிடையே வேறுபாடுகள் இருக்க முடியும். இக்கருத்து வேறுபாட்டிற்கு மொழியே அடிப்படையாக இருக்கலாம். அதாவது, குறிப்பிட்ட வசனத்தில் வரும் ஒரு சொல் பல பொருள்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம் அல்லது குறிப்பிட்ட வசனம் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதால் அதனை விளக்கி வைக்கும் தேவை ஏற்படலாம். அல்லது ஆகுபெயராக அந்த வசனம் அமைந் திருக்கலாம். இவ்வாறு மொழியோடு சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்துவிடலாம். முஜ்தஹித்களின் அறிவுத் தராதர ஏற்றத்தாழ்வும் சட்ட வசனத்தை விளங்குவதில் ஏற்படும் வேறுபாட்டிற்கு மற்றுமொரு காரணமாக நாம் கூறலாம்.

3. முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் வேறுபாடுகள்

மேலே கூறப்பட்ட இரு அம்சங்களிலும் அறிஞர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டார்கள் என நாம் வைத்துக்கொண்டாலும் இன்னுமோர் அம்சமும் நமது கவனத்திற்கு வருகிறது. சிலசமயம் வெளிப்படையாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தைக் கொண்ட பல ஹதீஸ்கள் வரலாம். அப்போது அவற்றிடையே இணக்கம் காணவேண்டும். அல்லது ஒன்றை ஏதோ ஒரு வகையில் உறுதிப்படுத்த வேண்டும். இங்குதான் அறிஞர்களின் அறிவுக் கூர்மைக்குப் பெரும் பங்கிருக்கிறது.

---

★ ஷாத் பில் மதன், ஷாத் பிஸ் ஸனத் என்பவற்றின் விளக்கம்

ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் பல அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்டுள்ளது என வைத்துக் கொள்வோம். அவ்வரிசையில் உள்ள அறிவிப்பாளர்கள் அனைவரும் அவர்களுக்கு இருக்கவேண்டிய நிபந்தனைகளைச் சமமாகவே பெற்றுள்ளனர் என்றும் வைத்துக் கொள்வோம். இந்நிலையில் ஓர் அறிவிப்பாளர் வரிசையில் வந்த இந்த ஹதீஸ் வசனம் ஏனையவற்றோடு ஒப்பிடும்போது முரண்படுவதாயின் இவ்வாறான ஹதீஸ் ஷாத் பில் மதன் எனக் கூறப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் பல அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்டுள்ளது. ஒரு அறிவிப்பாளர் வரிசையாக வந்த அந்த ஹதீஸ் ஏனைய அறிவிப்பாளர் வரிசைகளோடு ஒப்பிடும்போது முரண்பட்டு வந்துள்ளது. இந்த முரண்பட்ட ஹதீஸைத் தந்த அறிவிப்பாளர் வரிசையிலுள்ள அறிவிப்பாளர்கள் தமக்குள்ள நிபந்தனைகளைப் பொறுத்தவரை சரியாகவே பெற்றுள்ளனர். எனினும் ஏனைய அறிவிப்பாளர் வரிசைகளோடு ஒப்பிடும்போது தரக்குறைவு காணப் படுகிறது. இப்போது இது 'ஷாத் பிஸ் ஸனத்' என அழைக்கப்படும். (மொழி பெயர்ப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஒருவர் முரண்பாடில்லை எனக் கருதி வெளிப்படையாகவே முரண்பட்டதாகத் தோன்றும் வசனங்களிடையே இணக்கம் காண்பார். வேறொருவரோ ஒன்றை ஏதோ ஒரு வகையில் ஆதாரங்காட்டி உறுதிப்படுத்துவார். ஒரு முஜ்தஹிதின் கருத்தை இன்னொருவர் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஒருவர் கருத்து மற்றொருவருக்கு ஆதாரமாக அமையாது என்பதை நாம் இங்கே கவனத்திற் கொள்ள வேண்டும்.

4. சட்டவாக்க அடிப்படை விதிகள்[உஸூல்], சட்டவாக்க மூலாதாரங்கள் என்பவற்றின் அடிப்படையில் எழும் கருத்து வேறுபாடு

ஹதீஸ்களை ஏற்பதிலும், மறுப்பதிலும் ஒவ்வோர் இமாமுக்கும் ஓரளவு வேறுபட்ட நிபந்தனைகளும், அடிப்படை விதிகளும் உள்ளன. அவ்வாறே குறிப்பிட்ட சட்ட வசனத்திலிருந்து சட்டங்களை வகுத்துக் கொள்வதிலும் வேறுபட்ட போக்குகளும், வழிமுறைகளும் பின்பற்றப் படுகின்றன. அதேபோன்று சில சட்டவாக்க மூலாதாரங்களும் கருத்து வேறுபாட்டிற்கு உரியனவாகக் காணப்படுகின்றன. ஒரு நபித்தோழரின் சொல்லை அல்லது மார்க்கத் தீர்ப்பை பலம் வாய்ந்த ஒரு சட்டவாக்க மூலாதாரமாக அதாவது குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் தரத்தில் வைத்து நோக்குவோரும், அதை அவற்றை விடக் குறைந்த தரத்தில் வைத்து நோக்குவோரும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

மதீனாவாசிகளின் செயலை சட்டவாக்க மூலாதாரமாகக் கொண்டு சிலசமயம் சிலவகையான ஹதீஸ்களைவிட அதனை மேலாக மதிப்பவர்களும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

ஒரு ஹதீஸ் அறிவிப்பாளர் தாம் அறிவிக்கும் விஷயத்துக்கு முரணாகச் செயல்பட்டிருப்பார். இந்த அறிவிப்பாளரின் செயலைக் கணிப்பதிலே இமாம்களிடையே கருத்து வேறுபாடு தோன்றுகிறது.

ஒரு குறிப்பிட்ட செயல் கூடாது என்று தடுக்கப்பட்டால் அச்செயல் முற்றாகச் செல்லுபடியாகாது எனச் சிலர் கணிப்பர். வேறு சிலரோ இதற்கு மாற்றமான கருத்தைக் கொள்வர்.

இவ்வாறு சட்டவாக்க அடிப்படை விதிகளிலும் சட்டவாக்க மூலாதாரங்களிலும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இவை சட்ட அடிப்படை விதிகள் பற்றிய நூல்களிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கருத்து வேறுபாடுகளுக்கான இந்நான்கு காரணங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டிருப்பது அவதானிக்கத் தக்கதாகும். ஒரு சில சட்டப் பிரச்சனைகளை நாம் எடுத்து நோக்கும்போது இக்காரணங்கள் எல்லாமோ அல்லது சிலவோ அவற்றில் கருத்து வேறுபாடு தோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்குக் காரணமாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடியும். ஒரு முஜ்தஹித் குறிப்பிட்ட ஒரு வசனத்தை விளக்குவதில் அவர் சட்ட ஆக்கத்திற்காகக் கடைப்பிடிக்கும் வழிமுறையும் அவர் கொண்டுள்ள சட்ட மூலாதாரங்களும் பெருந்தாக்கத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவேதான் மத்ஹப்களுக்கு உட்படாத முஜ்தஹித்களாயினும்சரி, அல்லது மத்ஹப்களின் கட்டுக் கோப்பினுள்ளே உள்ள முஜ்தஹித்களாயினும்சரி, சட்டவாக்க அடிப்படை விதிகளும் வழிமுறைகளும் ஓரளவுக்கேனும் அவர்களிடையே ஒத்துப்போகக் கூடியதாக இருக்குமாயின், அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் குறைந்து காணப்படும். இன்றேல் கருத்து வேறுபாடுகள் அதிகரித்துச் செல்லும்.

கருத்து வேறுபாடுகளை ஒழித்து மத்ஹப்களையெல்லாம் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற வாதம் இந்த வகையில் பலவீனமுறுகின்றது. நடைமுறை உண்மைக்கே அது மாறுபட்டது. அறிஞர்களிடையே சட்டம் சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் காணப்படுவது கண்டு வெறுப்பு கொள்வதும் விலகுவதும் குறுகிய கண்ணோட்டத்தின் விளைவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகக் கொள்ளப்படல்

பிக்ஹுக் கலையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களை முன்னைய கட்டுரையில் சுருக்கமாக நோக்கினோம். இனி அந்தக் காரணங்களைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

## குறிப்பிட்ட ஹதீஸ் உறுதிப்படுத்தப்படுவதில் உண்டாகும் கருத்து வேறுபாடு

ஷரீஅத் சட்டங்களில் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கான காரணங்களைத் தொகுத்து நோக்கும்போது அவற்றில் 'ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் உறுதிப்படுத்தப்படுவதில் உண்டாகும் கருத்துவேறுபாடு' என்பதை முதற்காரணமாகக் கொள்ளமுடியும்.

குர்ஆன், ஹதீஸின் சட்டவசனங்களே முஜ்தஹித்களின் முதன்மையான மூலாதாரம். அவற்றை அடிப்படையாகக் கொண்டே அனைத்துச் சட்டங்களும் பெறப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் ஆதாரபூர்வமானதாக உறுதிப்படுத்தப்பட்டு, அது கொடுக்கும் கருத்தும் திட்டவட்டமானதாக இருந்து, அதற்கு முரணாக வேறு சட்ட வசனங்கள் எதுவும் காணப்படவில்லையாயின் அந்த அடிப்படையிலேயே சட்டம் பெறப்படவேண்டும். இதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளமாட்டார்கள்.

'ஹதீஸ் ஆதாரபூர்வமானது என உறுதிப்படுத்தப்படுமானால் அது கூறும் கருத்தே எனது மத்ஹப்' என்ற இமாம்களின் கருத்து இந்தப் பொருளையே தரும். ஆனால், ஓர் இமாமுக்கு குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் கிடைத்து விடுமாயின் அவர் அதன் வெளிப்படையான கருத்தைப் பார்த்து அதற்கேற்ப சட்டம் சொல்ல வேண்டும். அவ்வாறில்லையாயின் அவர் ஹதீஸைப் புறக்கணித்தவராகின்றார் என சிலர் மேற்குறித்த இமாம்களின் கருத்துக்கு விளக்கம் கொடுக்கின்றனர். ஆனால் உண்மையில் ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டு திட்டவட்டமான கருத்தையும் கொடுக்குமாயின் இமாம்கள் அதனைப் புறக்கணிக்கமாட்டார்கள். அவர்களது இறைபக்தி, தூயவாழ்வு, தன்னலமற்ற சேவை என்பன இதற்குச் சான்று பகரும்.

குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் ஓர் இமாமிடம் போய்ச் சேர்வதற்கும், அந்த ஹதீஸ் அவரிடத்தில் ஆதாரபூர்வமானது என ஏற்கப்படுவதற்குமிடையே பெரும் வேறுபாடு இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அது விளங்காத போதுதான் மேற்கூறிய தவறான போக்குகள் தோன்றுகின்றன.

ஒவ்வோர் இமாமுக்கும் சட்டங்கள் பெறுவதற்கென்று சில அடிப்படைகளும், விதிகளுமுள்ளன. குறிப்பிட்ட ஹதீஸை ஆதாரபூர்வ மானதென்று நிறுவவும் அவர்களிடம் விதிகளும் அடிப்படைகளும் இருக்கும். குறிப்பிட்ட ஹதீஸின் கருத்தை விளக்குவதற்கும் இதே வகையான விதிகளும் அடிப்படைகளும் அவர்களிடம் உண்டு. அக்குறிப்பிட்ட ஹதீஸுக்கு முரணாக வேறு ஹதீஸ்களோ, குர்ஆன் வசனங்களோ இல்லை என நிறுவவும் அவர்களிடையே இத்தகைய விதிகள் காணப்படுகின்றன. இந்த அடிப்படைகளும், விதிகளும் இமாம்களிடையே வேறுபட்டவையாக இருக்கின்றன. இமாம்கள் அனைவரும் சுயமாக குர்ஆன், ஹதீஸ் வசனங்களை ஆராய்ந்து சட்டம் பெறும் ஆற்றல்மிக்க முஜ்தஹித்களாக விளங்கினர். எனவே ஒருவர் இன்னொருவரின் கருத்தை ஏற்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை கிடையாது.

இமாம்கள் வகுத்த சட்டங்களையும் அவர்கள் சட்டம் பெறக் கையாளுகின்ற முறைகளையும் நோக்கும்போது இந்த உண்மை நன்கு தெளிவாகும். எந்த இமாம் வகுத்த சட்டங்களை எடுத்து நோக்கினாலும், அவர்களது சட்டங்களில் சில ஏனைய இமாம்கள் ஆதாரபூர்வமானவை என ஏற்றுக் கொண்ட ஹதீஸ்களுக்கு முரணாக அமைந்திருப்பதை அவதானிக்க முடியும். அல்லது அவர் தாம் ஆதாரபூர்வமானது எனக் கருதிய ஹதீஸ்களுக்கு ஏற்ப சட்டங்களை வகுத்திருப்பார். ஆனால் ஏனையோர் அவற்றை ஆதாரபூர்வமற்றது என மறுத்திருப்பர்.

''வக்பு செய்யப்பட்ட சொத்தை விற்க முடியும்'' என்ற கருத்துடையவர் இமாம் அபூஹனிபா. இக்கருத்துக்கு முரணாகச் சொல்லும் இமாம் அபூ யூஸுப், இமாம் அபூ ஹனிபாவின் இந்தக் கருத்தைப் பற்றிக் கூறியது மேற்கூறியவற்றுக்கு ஓர் எளிய எடுத்துக்காட்டாகும். அபூ யூஸுப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

'இமாம் அபூ ஹனிபா அவர்களுக்கு இக்குறிப்பிட்ட ஹதீஸ் கிடைத்திருக்குமாயின் அதற்கு ஏற்பவே சொல்லியிருப்பார். வக்புச் சொத்தை விற்க முடியும் என்ற கருத்தை திரும்பப் பெற்றிருப்பார்.''[1]

தலைசிறந்த அறிஞர்கள் இவ்வாறான போக்கை பிழையானது எனக் கருதவில்லை. ஆயினும் கருத்து வேறுபாடுகளுக்கான காரணங்கள் பற்றிய தெளிவற்றோர் அல்லது தமது கருத்துக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுத்து தமது கருத்துக்கு முரணாக அமையும்

---

1. பத்ஹுல் பாரி, பாகம் 5, பக். 43.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துகளை பரந்த மனதோடு ஏற்கும் சக்தியற்றோர் இந்த இடத்தில் குழம்பினர்; விமர்சித்தனர்; பிறரைத் தாக்கினர். இப்படியான போக்கை பல்வேறு காலகட்டங்களில் காணலாம்.

இப்னு அஃபீ திஃப் அல் மதனீ என்பார் ஒரு பெரிய ஹதீஸ்கலை வல்லுனர். இவர்,

''இருவர் கொள்முதல், விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும்போது அவர்கள் பிரிந்து செல்லாதவரையில் தமது அந்தக் குறிப்பிட்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் உரிமையைப் பெறுகிறார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)

என்ற ஹதீஸின் வெளிப்படையான கருத்துக்கேற்ப இமாம் மாலிக் தீர்வு சொல்லவில்லை என அவரைக் கடுமையாக விமர்சித்தார் இப்னு அஃபீ திஃப். இமாம் மாலிக் மேற்குறிப்பிட்ட ஹதீஸை தமது முஅத்தாவிலும் பதிந்துள்ளார்.

இமாம் மாலிக் மேற்குறிப்பிட்ட ஹதீஸில் 'பிரிந்து செல்லல்' என்பதற்கு 'பேச்சால் பிரிதல்' – உடலால் பிரிந்து செல்லல் என்பது அல்ல – என்ற கருத்தைக் கொடுத்தார். இதே கருத்தையே இமாம் அபூஹனிபாவும் கொண்டுள்ளார். இமாம் மாலிக் இவ்வாறு கருத்துக் கொடுத்தமைக்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானது என்பதில் சந்தேகமில்லையாயினும் மதீனாவாசிகளின் செயல் இதற்கு முரணாக அமைந்துள்ளதை அவதானித்தே இமாம் மாலிக் (இவர் மதீனாவாசிகளின் செயலை ஒரு சட்ட மூலாதாரமாகக் கொண்டவர்) இந்த ஹதீஸுக்கு மேற்குறிப்பிட்ட விளக்கத்தை அளித்தார்.

இப்னு அஃபீ திஃப் இமாம் மாலிக்கை கடுமையாக விமர்சித்தார். இவர்,

''மாலிக்கிடம் தவ்பாக் கேட்குமாறு கூறப்படவேண்டும். தவ்பாச் செய்யின் அவரை விட்டுவிடலாம். இல்லாவிட்டால் அவர் கொல்லப்பட வேண்டும்''[2]

என்று கூறினார். ஆனால், அஃபீ திஃபின் இப்போக்கை பல அறிஞர்கள் கண்டித்தனர். அஃபீ திஃபின் கருத்தை இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் எடுத்துக்காட்டி விட்டு பின்வருமாறு கூறினார்:

'இமாம் மாலிக் ஹதீஸை மறுக்கவில்லை. அதற்கு விளக்கம்தான் கொடுத்தார்.''[3]

---

2. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், அல் இலல், பாகம் 1, பக். 193. தாரீக் பக்தாத், பாகம் 2, பக். 302.

3. தபகாத் ஹனாபிலா, பாகம் 1, பக். 251.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸை ஆதாரபூர்வமானது என நிறுவ பல விதிகளும், சட்டங்களும் காணப்படுகின்றன. அறிஞர்கள் அவற்றை வகுத்துத் தொகுத்து வைத்துள்ளனர். இந்த விதிகளிலும் சட்டங்களிலும் கருத்து வேறுபாடுகள் தோன்ற இடமில்லை. ஹதீஸ் கலை அறிஞர்கள் வகுத்துள்ள விதிகளை முஜ்தஹித்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சிலர் எண்ண இடமுண்டு. ஆனால், இது தவறான எண்ணமாகும். ஏனெனில் இமாம்கள் ஹதீஸ், பிக்ஹ் ஆகிய இரு துறைகளிலும் தேர்ந்தவர்கள். எனவே, சட்டங்கள் பெறவென அவர்கள் தாங்களாகவே சில விதிகளை வகுத்துக் கொண்டுள்ளனர். பிறரது கருத்துகளில் தங்கியிருக்க வேண்டுமென நாம் அவர்களை வற்புறுத்த முடியாது. குறிப்பாக ஹதீஸ்கள் முழுமையாக எழுதப்பட்டு, ஒன்றாகத் தொகுக்கப்பட்ட காலத்திற்கு முந்தி வாழ்ந்தவர்களே இந்த இமாம்கள். எனவே எவ்வகையிலும் பிறரது கருத்துகளை ஏற்க வேண்டும் என நாம் அவர்களை வற்புறுத்த முடியாது. ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை என நிறுவ அவர்களிடம் பல அடிப்படைகள் இருந்தன. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன. அவற்றினூடே கருத்து வேறுபாடுகளுக்கு இது எந்த வகையில் காரணமாக இருந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

[அ] 'மஸ்தூர்' அறிவிக்கும் ஹதீஸில் கருத்து வேறுபாடு

மஸ்தூர் என்பது ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் அறிவிப்பாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புப் பெயராகும். இவர் அதாலத்* என்ற பண்பைக் கொண்டவரா, இல்லையா என்பது பற்றிய தகவல்கள் இல்லாத நிலையில் அவரிடம் இருந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் ஹதீஸ்களைக் கேட்டுப் பெற்று அறிவித்திருப்பர்.[4]

சில அறிஞர்கள் மஸ்தூர் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவராக இருப்பின் 'அத்ல்' எனக் குறிப்பர். இந்த வகையில் அவர்களது அறிவிப்புகளையும் ஏற்பர். முஸ்லிம் பொதுவாக 'அதாலத்' உடையவராக இருப்பார் என இவர்கள் கூறுவர். வேறு சிலரோ 'மஸ்தூரை' 'அத்ல்' ஆக ஏற்க மாட்டார்கள். ஹதீஸ்களை நிறுவுவதில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கில் அவர்களது அறிவிப்பை ஏற்க மாட்டார்கள். இமாம் ஸர்கஷி இது பற்றிக் கீழ்வருமாறு கூறுகிறார்:

''மஸ்தூரைப் பொறுத்தவரை இவரது ஹதீஸ் 'அதாலத்' இல்லாதவரின் ஹதீஸ் போன்றதே என இமாம் முஹம்மத் தமது கிதாபுல்

---

★ 'அதாலத்' என்பதன் பொருள் முஸ்லிமாகவும், விளங்கும் வயதை உடையவராகவும், பெரும் பாவங்கள் செய்யாதவராகவும், நற்குணமுள்ளவராகவும் இருத்தல் என்பதாகும்.

4. கலாநிதி முஹம்மத் இஜாஜ் கதீப், 'உஸூலுல் ஹதீஸ்', பக்.271.
மேலும் பார்க்க மஹல்லாவியின் தஸ்ஹீலுல் உஸூல், பக். 148.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்திஹ்ஸான் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஹதீஸ்களை அறிவிப்புச் செய்வதில் மஸ்தூர் அத்லை ஒத்தவரே என்பது இமாம் அபூ ஹனிபாவின் கருத்து என்றும் இதற்கு ஆதாரமாக 'முஸ்லிம்கள் பரஸ்பரம் நேர்மையானவர்கள்' என்ற உமர் (ரலி) அவர்கள் அறிவித்த ஹதீஸை இமாம் அபூ ஹனிபா மேற்கோளாகக் காட்டுகிறார் என்றும் அபூ ஹனிபாவின் மாணவராகிய இமாம் ஹஸன் கூறியுள்ளார்.

ஒரு வழக்கு நிரூபிக்கப்படுவதற்கு போதிய ஆதாரங்களின்றி, சந்தேகங்களோடு கூடியதாக வரும்போது வழக்கை நிறுவுவதற்கு போதிய சான்றுகளில்லாத பட்சத்தில் மஸ்தூர் சாட்சியாளராக வரமுடியும். இந்த மஸ்தூர் மீது வாதி குறைகாணவில்லையாயின் அவரது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியும் என்பது இமாம் அபூ ஹனிபாவின் கருத்தாகும்.''

தொடர்ந்து இமாம் ஸர்கஷி கூறுகிறார்:

''இஸ்திஹ்ஸானில் இமாம் முஹம்மத் குறிப்பிட்ட கருத்தே இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானது. ஏனெனில், பாவச் செயல்கள் இக்காலத்தில் மலிந்து விட்டன. எனவே, 'அதாலத்' நிறுவப்படவில்லையாயின் மஸ்தூரின் அறிவிப்பை இக்காலப்பிரிவில் நாம் ஏற்க முடியாது. சாட்சி சொல்லும் விடயத்திலும் இதனையே கவனத்தில் கொள்ள வேண்டும்.''[5]

எனவே, ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் (ஸனத்) ஒரு மஸ்தூர் அறிவிப்பாளர் காணப்படினும் அந்த ஹதீஸை இமாம் அபூஹனிபா ஆதாரபூர்வமானது எனக் கருதுவார். ஆனால், அதே காரணத்திற்காக ஏனைய அறிஞர்கள் அந்தக் குறிப்பிட்ட ஹதீஸை பலவீனமானது எனக் கருதுவர். எனவே, இதனூடாகப் பெறப்படும் சட்டத்திலும் கருத்து வேறுபாடு தோன்றும் என்பதை விளக்க அவசியமில்லை.

[ஆ] ஹதீஸ் முர்ஸல் ஆதாரபூர்வமானதா என்பதில் ஏற்படும் கருத்து வேறுபாடு

இஸ்லாமியச் சட்ட அறிஞர்களும் சட்ட மூலாதாரங்கள் பற்றிய அறிஞர்களும் ஹதீஸ் முர்ஸலுக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுவர்:

''நபித்தோழரல்லாத ஒருவர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொன்னதாக நேரடியாக - இடையே அறிவிப்பாளர் வரிசை குறிப்பிடாமல் - ஒரு ஹதீஸை அறிவிப்பின் அது ஹதீஸ் முர்ஸல் எனப்படும்.''

---

5. உஸூலுல் ஸர்கஷி, பாகம் 1, பக்.27.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் கலை அறிஞர்களின் வரைவிலக்கணம் வருமாறு: தாபிஈன் ஒருவர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்களென ஒரு ஹதீஸை நேரடியாக அறிவித்தால் அந்த ஹதீஸ் 'ஹதீஸ் முர்ஸல்' எனப்படும். (இங்கே அறிவிப்பாளர் வரிசையில் நபித்தோழர் குறிப்பிடப்பட மாட்டார் - மொழி பெயர்ப்பாளர்)

இதுபற்றி இமாம் ஸர்கஷி பின்வருமாறு கூறுகிறார்:

''இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளுக்குட்பட்ட காலத்தைச் சேர்ந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களின் முர்ஸலான ஹதீஸ்கள் நமது கருத்துப் போக்குக் கொண்ட(ஹனபி) அறிஞர்களிடையே ஆதார பூர்வமானதாகக் கணிக்கப்படும். ஆனால் இமாம் ஷாபிஈ பின்வருமாறு கூறுகிறார்: 'முர்ஸலான ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை என நிறுவப்படவேண்டுமாயின் ஒரு குர்ஆன் வசனத்தால் அதன் கருத்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். அல்லது முன்வாழ்ந்த அறிஞர்கள் அந்தக் குறிப்பிட்ட ஹதீஸின்படி செயல்பட்டிருக்க வேண்டும். அவ்வாறுமில்லையாயின் வேறோர் அறிவிப்பாளர் வரிசையூடாக அறுபட்ட அந்த அறிவிப்பாளர் தொடர் நிரப்பப்பட்டு தொடர்பு படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் ஸஈத் இப்னு முஸய்யப் அறிவித்த முர்ஸலான ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை, ஏற்கத் தக்கவை எனக் காண்கின்றேன். ஏனெனில், அவற்றை ஆராய்ந்து பார்த்தபோது அவை அறிவிப்பாளர் தொடர் அறுபடாமல் இறுதிவரை செல்வதைக் கண்டேன்'[6] (ஸஈத் இப்னு முஸய்யப் ஒரு தாபிஈன் என்பது குறிப்பிடத்தக்கது).''

[இ] ஓர் அறிவிப்பாளர், தாம் அறிவித்த ஹதீஸையே மறுப்பின் அது சம்பந்தமாகக் கொள்ளப்படும் முடிவு பற்றிய கருத்து வேறுபாடு

ஓர் அறிவிப்பாளர் குறிப்பிட்ட ஒரு ஹதீஸை அறிவித்துவிட்டு பின்னர் தாம் அதனை அறிவிக்கவில்லை என மறுப்பின் அது பற்றி என்ன முடிவுக்கு வருவது என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். இமாம் அபூஹனிபா, அபூயூஸுப் ஆகிய இருவரும் அந்த ஹதீஸை ஏற்றுச் செயல்பட முடியாது என்கின்றனர். இமாம் ஷாபிஈ, முஹம்மத்(அபூஹனிபாவின் மாணவர்) ஆகிய இருவரும் அதனை ஏற்றுச் செயல்பட முடியும் என்கின்றனர்.

இமாம் ஸர்கஷி இது பற்றித் தரும் விளக்கத்தைக் கீழே தருகிறோம்:

''சாட்சி, சத்தியம் இரண்டையும் வைத்து தீர்வு அமைய வேண்டும்'' என்ற ஹதீஸை ஸுஹைல் இப்னு அபீஸாலிஹ் அறிவித்ததாக ரபீஆ அறிவிக்கிறார். பின்னர், ஸுஹைல் இப்னு அபீ ஸாலிஹிடம் ஒருவர்

6. உஸூலுல் ஸர்கஷி, பாகம் 1, பக். 360.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று மேற்கூறிய ஹதீஸை அவர் அறிவித்தாரென ரபீஆ கூறியதாகச் சொன்னபோது, அவ்வாறு அறிவித்ததாக தனக்கு ஞாபகமில்லை என ஸுஹைல் இப்னு அபீஸாலிஹ் பதிலளித்தார். பின்னர் ஸுஹைல் இந்த ஹதீஸைத் திரும்பவும் அறிவிக்கும்போது, தம்மிடம் ரபீஆ கேட்டறிந்ததாகச் சொல்லப்படுவதாலும், அவர் நம்பிக்கைக்குரியவராக இருப்பதாலும் தாம் இந்த ஹதீஸை அறிவிப்பு செய்வதாகக் கூறுவார்.

இமாம் ஷாபிஈ இந்த ஹதீஸை அதன் அறிவிப்பாளர் மறுத்தபோதிலும் அதனை ஏற்றார். ஆனால் எமது (ஹனபி) கருத்துப் போக்குடைய அறிஞர்கள் அதனை ஏற்கவில்லை. ஸுலைமான் இப்னு மூஸா சுஹ்ரியிடம் கேட்டதாக பின்வரும் ஹதீஸை அறிவிக்கிறார்:

'எந்த ஒரு பெண்ணிற்கும் அவளது பொறுப்பாளரின்(வலீ) அனுமதி யின்றித் திருமணம் செல்லுபடியாகாது.'

இப்னு ஜுரைஜ் இந்த ஹதீஸ் பற்றி ஸுஹ்ரியிடம் கேட்க அது பற்றித் தனக்குத் தெரியாது என அவர் கூறினார். இவ்வாறு அறிவிப்பாளர் இந்த ஹதீஸை தாம் அறிவித்ததாகத் தெரியாது எனக் கூறி மறுத்த போதிலும் இமாம் முஹம்மத், ஷாபிஈ ஆகியோர் இந்த ஹதீஸை ஏற்று, அதன் அடிப்படையில் செயல்பட்டனர். ஆயினும் இமாம் அபூஹனிபா, அபூ யூஸுப் ஆகியோர் இந்த ஹதீஸை ஏற்கவில்லை.

ஹதீஸ் ஓர் இமாமிடம் போய்ச் சேருதல் சேராமலிருத்தல், ஹதீஸ் ஆதாரபூர்வமானது எனக் கொள்ளப்படுவதிலுள்ள கருத்து வேறுபாடு என்பனவே பிக்ஹுக் கலையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கு முதற்காரணம் என நாம் கூறினோம். இனி சில எடுத்துக்காட்டுகளின் மூலம் இம்முதற் காரணத்தால் எவ்வாறு கருத்து வேறுபாடுகள் உருவெடுக்கின்றன என்பதை நோக்குவோம். உண்மையில், இக்கருத்து வேறுபாடுகள் நபித்தோழர்கள் காலத்திலிருந்தே நிலவி வந்திருக்கின்றன. குறிப்பிட்ட ஹதீஸ் ஒருவரைப் போய்ச் சேருதல் சேராமலிருத்தல் என்பதால் தோன்றும் கருத்து வேறுபாட்டிற்கு புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ள கீழ்வரும் ஹதீஸ் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்:

இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்: "உமர்(ரலி) ஷாமுக்குப் போகப் புறப்பட்டார். ஷர்க் என்ற இடத்தை அடைந்த போது படைத்தலைவர்களான அபூஉபைதா இப்னு ஜர்ராஹ்வும் அவரது தோழர்களும் உமர்(ரலி) அவர்களைச் சந்தித்து, ஷாமில் காலரா நோய் பரவியுள்ளதாகக் கூறினர். அப்போது உமர்(ரலி) என்னைக் கூப்பிட்டு ஆரம்ப கால முஹாஜிரின்களை அழைக்குமாறு பணித்தார். நான் அவர்களை ஒன்று சேர்த்தேன். அவர்களிடம் ஷாமில் காலரா பரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால் பயணத்தைத் தொடர்வதா, வேண்டாமா என்று ஆலோசனை கேட்டார் உமர்(ரலி). அப்போது சிலர் 'நீங்கள் ஒரு வேலைக்காகப் புறப்பட்டு வந்துள்ளீர்கள். எனவே, திரும்பிச் செல்வதை நாங்கள் விரும்பவில்லை' என்றனர். மற்றும் சிலர் 'உங்களுடன் இறைத்தூதர்(ஸல்) அவர்களது தோழர்களும் ஏனைய பலரும் இருக்கிறார்கள். அவர்களை அந்த நோய்க்கு உட்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை' என்றனர். இவ்வாறு அவர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றியது. பின்னர் அவர்களைக் கலைந்து போகுமாறு கூறிவிட்டு அன்ஸாரிகளை ஒன்று சேர்க்குமாறு பணித்தார். அவர்களை நான் அழைத்தேன். அவர் களிடமும் விடயத்தைக் கூறி உமர்(ரலி) ஆலோசனை கேட்டார். முஹாஜிரின்களைப் போன்றே அவர்களும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். அவர்களையும் கலைந்து போகுமாறு பணித்துவிட்டு குறைஷிகளில் பெரியவர்களை அழைக்குமாறு பணித்தார் உமர்(ரலி). அவர்கள் தம்மிடையே எக்கருத்து வேறுபாடுமின்றி 'இப்பெருநோய்க்கு மக்களை உட்படுத் தாது அவர்களைத் திருப்பிக் கூட்டிச் செல்வதே சிறந்தது என நாம் கருதுகிறோம்' என்றனர்.

இவ்வாலோசனையின் பின்னர் மக்களை நோக்கி உமர்(ரலி) அவர்கள் தாம் காலையில் புறப்படப் போவதாகவும் அவர்களையும் திரும்பிச் செல்லத் தயாராகுமாறும் கூறினார். அப்போது அபூ உபைதா(ரலி) உமரை நோக்கி 'அல்லாஹ்வின் விதியை (கழாகத்ர்) விட்டு ஓடுகிறீர்களா?' என்று கேட்டார். அதற்கு 'நீரா இதனைக் கேட்கிறீர், அபூ உபைதா?' (அபூ உபைதா தம்மோடு கருத்து வேறுபாடு கொள்வதை உமர்(ரலி) வெறுத்தார் என்பதை இது காட்டுகிறது.) என வினவிய உமர்(ரலி) தொடர்ந்து 'ஆம். அல்லாஹ்வின் ஒரு கத்ரை விட்டு இன்னொரு கத்ருக்கு ஓடுகிறோம். அபூஉபைதா! உம்மிடம் ஒட்டகங்கள் இருப்பதாக வைத்துக் கொள்ளும். நீர் அந்த ஒட்டகங் களோடு இரு வேறுபட்ட தன்மையான நிலத்தினூடகச் சென்று கொண்டிருக்கிறீர். ஒரு பகுதி பசுமையாக வளர்ந்த புற்களை உடையது. மற்றதோ காய்ந்து, வறண்டு போயுள்ளது. இவற்றில் நீர் பசுமையான பூமியில் அவற்றை மேய விட்டாலும் அல்லது வறண்ட பூமியில் மேயவிட்டாலும் இறைநியதிப்படி தானே அப்படிச் செய்வீர்!' என்று கேட்டார்.

இந்நிலையில் ஏதோ வேலையாக வெளியே சென்றிருந்த அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(ரலி) அங்கு வந்தார். இது பற்றிய விளக்கம்

7. ரியாலுஸ் ஸாலிஹீன், பக். 581-582.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடம் இருப்பதாகக் கூறி, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் சொன்னதைக் கேட்டுள்ளதாக கீழ்வரும் ஹதீஸை அறிவித்தார்: 'நீங்கள் ஒரு பகுதியில் தொற்று நோய் பரவியுள்ளதாகக் கேள்விப்பட்டால் அங்கே போகாதீர்கள். நீங்கள் இருக்கும்போது உங்கள் பகுதியில் அது பரவினாலும் அதனை விட்டுத் தப்பியோட முயலாதீர்கள்.' இதனைக் கேட்டு அல்லாஹ்வைப் புகழ்ந்தவராக உமர் திரும்பிச் சென்றார்.''[7]

இந்த எடுத்துக்காட்டிலிருந்து ஒரு ஹதீஸ் ஒருவரைச் சென்றடையாமலிருப்பதனால் ஏற்படும் விளைவு தெளிவாக விளங்குகிறது. குறிப்பிட்ட இந்த ஹதீஸை அறியாதிருந்தமையால் இறைத்தூதர்(ஸல்) அவர்களோடு வாழ்ந்த நபித்தோழர்களுக்கிடையிலே கூட கருத்து வேறுபாடு தோன்றியது. இந்த ஹதீஸை அப்துர் ரஹ்மான் இப்னு அவ்போடு உஸாமா(ரலி)வும் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[8]

இன்னுமொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். நபித்தோழர்கள் ஓரேவகைப் பொருட்கள் பண்டமாற்றுச் செய்யப்படும்போது அதில் வட்டி ஏற்பட வழியுண்டா, இல்லையா என்பது பற்றி கருத்து வேறுபாடு கொண்டனர்.★

இந்த வகையில் இப்னு உமர், இப்னு அப்பாஸ் போன்றோர் பொருள் பண்டமாற்ற முறையில் வட்டி வர முடியாதெனவும் வட்டி என்பது பணம் கொடுக்கல் - வாங்கல்களில் மட்டுமே காணப்படும் என்ற கருத்தையும் கொண்டிருந்தனர். ''உடனுக்குடன் சம அளவுகளிலேயே தங்கத்தைத் தங்கத்துக்கு விற்பனை செய்யுங்கள்...'' என்று ஆரம்பமாகும் அபூஸயீத் அல்குத்ரி(ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸைக் கேட்ட பின்னர்தான், ஏனைய பெரும்பாலான நபித்தோழர்கள் கூறிய கருத்தை ஏற்று, இவர்களிருவரும் தமது கருத்தை திரும்பப் பெற்றனர். அபூஸயீத் அல் குத்ரியின் ஹதீஸை விளக்கும்போது இமாம் ஷௌகானி பின்வருமாறு கூறுகிறார்:

> ''மேற்குறிப்பிட்ட ஹதீஸின்படி பண்டமாற்றில் வட்டி காணப்பட முடியுமென்பது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்விடயமாகப் பல ஹதீஸ்கள் வந்துள்ளமையால் பெரும்பாலான சட்ட

8. மேற்படி நூல், பக். 582-583.

★பொருட்கள், பண்டமாற்ற முறையில் ஈடுபடுத்தப்படும்போது இஸ்லாம் சில விதிகளை வகுத்துள்ளது. ஒரே வகையான பொருட்களை மாற்றிக் கொள்ளும் போது உடனுக்குடன் ஒரேயளவில் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது ஓர் அடிப்படை விதி. இவ்வாறான விதிகள் மீறப்படும்போது அதனை வட்டி என இஸ்லாம் கருதுகிறது. இது பற்றிய விரிவான விளக்கங்களில் இஸ்லாமியச் சட்ட அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. இந்த வட்டியையே 'ரிபா-அல்-பள்ல்' என இஸ்லாமியச் சட்டம் கூறுகிறது. (மொழி பெயர்ப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் இதே கருத்தையே கொண்டுள்ளனர். இந்த ஹதீஸ்கள் அனைத்தும் குறிப்பிட்ட இப்பொருட்களை கொடுக்கல் - வாங்கல் களில், ஈடுபடுத்தும்போது ஒரே வகைப் பொருட்களை*, வித்தியாசமான அளவுகளில் அல்லது தவணையிட்டு விற்பது தடுக்கப்பட்டது (ஹராம்) என்றே கூறுகின்றன. எனினும் இப்னு உமர் அப்படியின்றி பொருள் கொடுக்கல் - வாங்கலில் வட்டி தோன்ற இடமில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தார். பின்னர் அதனை திரும்பப் பெற்றார். இவ்வாறே இப்னு அப்பாஸ்(ரலி)யும் இப்னு உமரின் அதே கருத்தைக் கொண்டிருந்தார். அவர் தமது கருத்தை திரும்பப் பெற்றாரா இல்லையா என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. அபூஸயீதின் ஹதீஸ் அவரிடம் கூறிக்காட்டப் பட்டதும் தமது கருத்தை திரும்பப் பெற்றது மட்டுமின்றி அல்லாஹ் விடம் பாவமன்னிப்பும் கேட்டு, பண்டமாற்றில் உண்டாகும் வட்டியில் கவனமாக இருக்குமாறு ஏவியும் வந்தார் என ஹாகிம் அறிவிக்கிறார்....''

இவ்வாறு குறிப்பிடும் ஷௌகானி தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறார்:

''உமர் இப்னு கத்தாபும் அவரது மகனும் பண்டமாற்றில் வட்டி உண்டாக முடியும்'' என்று காட்டும் ஹதீஸ்களைக் கூறியபோது தமது கருத்துகளை வாபஸ் பெற்ற இப்னு அப்பாஸ் பாவமன்னிப்பும் கேட்டார். அத்தோடு 'நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கேட்டு மனனமிடாதவற்றை நீங்கள் மனனமிட்டுள்ளீர்கள்' எனக் கூறினார் என்று ஹாஜிமீயும் குறிப்பிடுகிறார்.

மேலும் ஹாஜிமீ, இப்னு அப்பாஸ் கூறியதாகப் பின்வரும் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார்: ''இது எனது கருத்தாக இருந்தது. எனினும், அபூஸயீத் அல் குத்ரி இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக இவ்வாறு அறிவிக்கிறார். எனவே இறைத்தூதர்(ஸல்) அவர்களது ஹதீஸை ஏற்று எனது கருத்தை விடுகிறேன்.''[9]

குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் ஆதாரபூர்வமானதா இல்லையா என்று உறுதிப்படுத்துவதில் தோன்றும் கருத்து பேதங்களாலும் சட்டங்களில்

---

9. நைலுல் அவ்தார், பாகம் 5, பக். 216-217.

★ தங்கம், வெள்ளி, கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம், உப்பு இந்த ஆறு பொருட்களையும் குறிப்பிட்டு இறைத்தூதர்( ஸல்) அவர்கள், இவற்றைக் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது ஒரே பொருளை அதே பொருளுக்கு மாற்றினால் (எ.கா., தங்கத்தை தங்கத்துக்கு மாற்றல்) இரண்டு அம்சங்கள் அவதானிக்கப்படல் வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். ஒன்று, அளவு சமமாக இருக்க வேண்டும். இரண்டாவது, உடனுக்குடனே காலம் குறிக்காது மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த விதிகள் மீறப்பட்டால் அது வட்டியாகும். மேலே குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டும்தான் இந்த விதியா அல்லது ஏனைய பொருட்களையும் அடக்குமா என்பது பற்றி இஸ்லமிய சட்ட அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. (மொழிபெயர்ப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன என்பதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன.

இமாம் ஷாபிஈ சில சட்டங்கள் பற்றி இறுதி முடிவு கூறாமல் விட்டுள்ளார். அவை ஹதீஸ் உறுதிப்படுத்தப்படுவதைப் பொறுத்தது என அவர் கூறியுள்ளார். 'ஹதீஸ்கள் உறுதிப்படுத்தப்படுவது தொடர்பாக இமாம் ஷாபிஈ விட்ட சட்டங்கள் பற்றிய விளக்கம்' என்ற தலைப்பில் இமாம் இப்னு ஹஜர் நூலொன்றையே எழுதியுள்ளார். இதிலிருந்து ஹதீஸ் உறுதிப்படுத்தப்படுவதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் சட்டங்களில் எவ்வளவு பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக சட்டங்களிலிருந்தே ஓர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். 'ஈனத்'* பற்றி வந்திருக்கும் ஹதீஸ் ஆதாரபூர்வமானதா, இல்லையா என்பது பற்றி இமாம்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. இதனால் அது பற்றிய சட்டத்திலும் கருத்து வேறுபாடு நிலவுவதைக் காணமுடியும்.[10]

இது பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தும் 'பலவீனமானவை (ழயீப்)' என்று இமாம் ஷாபிஈ கூறுகிறார். எனவே, அந்த ஹதீஸ்களை ஆதாரபூர்வமானவை என அவர் கொள்ளவில்லை. ஆகவே, இந்தக் கொடுக்கல் - வாங்கல் சட்டபூர்வமானதே என்பது அவரது கருத்து. ஆனால், ஏனைய பெரும்பாலான சட்ட அறிஞர்கள் ஈனத் பற்றி வந்திருக்கும் ஹதீஸ்களின் பல வழிகளை எடுத்து நோக்கும்போது ஹதீஸ் பலம் பெறுவதாகவும் அந்த ஹதீஸ்களை மொத்தமாக நோக்கும்போது ஆதாரபூர்வமானவையாக அவற்றைக் கொள்ள முடியும் என்பதாகவும் கூறுகின்றார்கள். இந்த அடிப்படையில் ஈனத் கொடுக்கல் - வாங்கல் விலக்கப்பட்டது(ஹராம்) என்பது பெரும்பாலான இஸ்லாமியச் சட்ட அறிஞர்களின் முடிவாகும்.

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து இந்த முதற்காரணம் சட்டங்களில் கருத்து வேறுபாடு தோன்றுவதில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். எந்த இமாம் வகுத்து வைத்துள்ள சட்டங்களை எடுத்து ஆராய்ந்தாலும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் சிலவற்றிற்கு மாற்றமானவை என்று நினைக்கக்கூடிய சட்டங்களை அவற்றில் காணமுடியும். இதனால் அவர்கள் குற்றவாளிகளாக மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களால் முடிந்த அளவு ஆதாரங்களை ஆராய்ந்து பார்ப்பதிலும் சட்டங்களை நுணுக்கமாகப் பெறுவதிலும் தமது முயற்சியையும், ஆற்றலையும்

---

10. மேற்படி நூல், பக்.244.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிட்டார்கள். அதற்குரிய கூலியையும் அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

இமாம்கள் ஆதாரபூர்வமான ஹதீஸ்களைப் புறக்கணித்துவிட்டுச் சட்டமியற்றியுள்ளனர் என்று சிலர் கூறும் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவிக்கும்போது இமாம் இப்னு அப்துல் பர் கீழ்வருமாறு தெளிவாக விளக்குகின்றார்:

''இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக வரும் எந்த ஹதீஸையும் உரிய காரணமின்றி மறுக்கும் உரிமை எந்த அறிஞருக்கும் கிடையாது. குறிப்பிட்ட ஹதீஸ் கூறும் சட்டம் இன்னொரு ஹதீஸால் மாற்றப் பட்டதல்ல, இஜ்மாவால் மாற்றப்பட்டுவிட்டது அல்லது அக்குறிப் பிட்ட ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் குறைபாடு காணப்படு கின்றது என்பது போன்ற நியாயபூர்வமான காரணங்களைக் காட்டி ஒரு ஹதீஸை ஏற்காதிருக்கலாம். இப்படி நியாயபூர்வமான எந்தவொரு காரணமும் காட்டாமல் ஒரு ஹதீஸை ஒருவர் புறக்கணித்தால் அவர் பெரும்பாவியாக மாறுகிறார்.....''[11]

---

*11. ஜாமிஉ பயானில் இல்ம் வ பலிஹி, பாகம் 2, பக்.142.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட வசனங்களை விளங்குதல்

பிக்ஹ் கலையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கான இரண்டாவது காரணம்: சட்ட வசனங்களை அறிஞர்கள் விளக்குவதில் தோன்றும் கருத்து வேறுபாடு

சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் சட்ட அறிஞர்கள் அனைவருக்கும் கிடைத்திருக்க முடியும். அந்த ஹதீஸ் அவர்களது விதிகளுக்கமைய ஆதாரபூர்வமானதாகவும் இருக்க முடியும். இந்த ஒற்றுமை எல்லா அறிஞர்களிடமும் காணப்பட்டபோதிலும் குறிப்பிட்ட ஹதீஸ் தரும் கருத்தை விளங்குவதில் அவர்களிடையே வேறுபாடுகள் தோன்றலாம். இந்த வேறுபாடு, அதன் அடிப்படையில் பெறப்படும் சட்டங்களிலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கும். இதுவே பிக்ஹ் கலையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியமைக்கு இரண்டாவது காரணம்.

இக்காரணத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. வேறுபட்ட முறையில் விளங்கிக் கொள்ள குறிப்பிட்ட சட்ட வசனமே காரணமாக அமைந்திருத்தல்.

2. முஜ்தஹிதின் அறிவு, ஆற்றல் குறிப்பிட்ட சட்ட வசனத்தை விளங்கும்போது கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்துவிடல்.

இதில் முதற்பகுதியை நோக்குவோம். மொழியில் திட்டவட்டமான ஒரு கருத்தைக் கொடுக்கும் சொற்கள் காணப்படுவது இயல்பு. அதே போன்று பல கருத்துகளைக் கொடுக்கும் ஒரே சொல், தெளிவற்ற சொற் பிரயோகங்கள் என்பனவும் மொழியில் காணப்படும் இயல்பே ஆகும்.

எடுத்துக்காட்டாக, அரபுமொழியில் 'அய்ன்' என்ற சொல் பல பொருள்களைத் தரக் கூடியது. குறிப்பிட்ட ஓரிடத்தில் இச்சொல் பயன்படுத்தப்படும்போது சூழ்நிலையை அவதானித்தே அதன் பொருளை அறிய வேண்டும். 'அய்ன்' என்ற இந்தச் சொல் நீரூற்று, கண், உளவாளி போன்ற பல கருத்துகளில் பயன்படுத்தப்படுகிறது. இப்படியான சொற்பிரயோகங்கள் சட்ட வசனங்களில் இடம் பெறும் போது அதுவே கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்து விடுகிறது.

''தலாக் செய்யப்படும் பெண்கள் மூன்று மாதவிடாய்கள் 'இத்தா' இருக்க வேண்டும்'' (02:288) என்ற இறைவசனத்தில் வரும் 'குர்உ' என்ற சொல் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் 'குர்உ' என்ற சொல் 'மாதாந்த ருது' 'தூய்மையாதல்', 'மாதாந்த ருதுவும் தூய்மையாதலும்' போன்ற பல கருத்துகளைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

அபூ அம்ர் இப்னு அலா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''அரபிகளில் சிலர் மாதவிடாயை 'குர்உ' எனவும் வேறு சிலர் தூய்மையாவதை குர்உ எனவும் இன்னும் சிலர் மாதவிடாய், தூய்மையாதல் இரு கருத்தையும் ஒன்றாகச் சேர்த்தும் குர்உ என அழைப்பர்.''[1]

எனவே, இக்குறிப்பிட்ட சட்ட வசனத்தில் வரும் குர்உ என்ற சொல் பல கருத்துகளைக் கொடுப்பதால் சட்ட அறிஞர்களிடையேயும் இதனால் பெறப்படும் சட்டத்திலும் கருத்து வேறுபாடு தோன்றியது. இமாம் குர்துபி தமது தப்ஸீரில் கீழ்வருமாறு கூறுகிறார்:

''குர்உ என்ற சொல் கொடுக்கும் பொருளில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டனர். கூபாவாசிகள் அது மாதாந்த ருது என்றனர். உமர், அலீ, இப்னு மஸ்ஊத், அபூ மூஸா, முஜாஹித், கத்தாதா, ழஹ்ஹாக், இக்ரிமா, ஸுஃயூத்தி போன்றோரும் இக்கருத்தையே கொண்டுள்ளனர். ஹிஜாஸ்வாசிகள் 'குர்உ' என்பதன் பொருள் தூய்மையாதல் என்றனர். ஆயிஷா, இப்னு உமர், ஸைத் இப்னு தாபித், ஸுஃஹ்ரி, அபான் இப்னு உஸ்மான், ஷாபிஈ போன்றோரும் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.''[2]

''குர்ஆனை 'தாஹிர்' தவிர வேறு யாரும் தொடக்கூடாது'' (தபரானி)[3] என்ற ஹதீஸில் வரும் தாஹிர் என்ற சொல்லும் இவ்வகையானது. இதுவும் பல கருத்துகளைக் கொடுக்கக்கூடிய ஒரு சொல்லாகும். ஸன்ஆனி தமது நூலான சுபுலுஸ்ஸலாமில் இதுபற்றிக் கீழ்வருமாறு கூறுகிறார்:

'''தாஹிர்' என்ற சொல் பல கருத்துகளையும் கொடுக்கக் கூடியது. பெருந்துடக்கிலிருந்து நீங்கியிருப்பவரை 'தாஹிர்' என்று கூறலாம். சிறுதுடக்கிலிருந்து நீங்கியிருப்பவரையும் 'தாஹிர்' எனலாம். அவ்வாறே உடலில் அழுக்கு எதுவும் இல்லாத ஒருவரையும் 'தாஹிர்' எனலாம்...''[4]

சொற்கள் பல பொருள்களைக் கொடுத்து கருத்து வேறுபாட்டிற்கு வழிவகுப்பது போன்றே வசன அமைப்பும் பல பொருள்களைக் கொடுத்து கருத்து வேறுபாட்டிற்கு இட்டுச் செல்லலாம். இதற்கு

---

1.தப்ஸீர் குர்துபி, தொகுதி 3, பக். 113.

2.தப்ஸீர் குர்துபி, தொகுதி 3, பக். 113.

3. முஜ்மஉ ஜவாயித், தொகுதி 1, பக். 276.

4.ஸுஃப்லுஸ் ஸலாம், தொகுதி 1, பக்.68.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம். அபூஸயீத் அல் குத்ரி (ரலி), நபி (ஸல்) கூறியதாக கீழ்வருமாறு அறிவிக்கிறார்:

''தகாதுல் ஜனீனி தகாது உம் மிஹி'' இங்கே வரும் 'தகாத்' என்ற சொல் இருவகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு முறையே மேலே குறிப்பிட்டுள்ள 'தகாதுல் ஜனீனி'. இப்போது கருத்து 'ஒரு தாயின் வயிற்றில் இருக்கும் கன்றை அறுப்பது தாயை அறுப்பதே யாகும் என்று அமையும். இந்த வகையில், வயிற்றில் கன்றுள்ள ஒரு மிருகத்தை அறுக்கும்போது அதன் கன்று வயிற்றில் இறந்துவிடினும் அறுத்ததாகவே கருதப்படும். ஏனெனில், தாயை அறுப்பதே அதனை அறுப்பதாகும் என்ற கருத்தை இந்த ஹதீஸ் கொடுக்கிறது. எனவே, மீண்டும் கன்றை அறுக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த ஹதீஸ் ''தகாதல் ஜனீனி தகாத உம்மிஹி'' என்றும் அறிவிப்பு செய்யப்படுகிறது. இப்போது அதன் பொருள் ''ஒரு மிருகத்தின் வயிற்றில் இருக்கும் கன்றை அந்தத் தாய் மிருகத்தை அறுப்பது போன்று அறுங்கள்'' என்பதாகும். இது முன்னையதை விட வேறுபட்ட கருத்துக்கு இடமளிக்கிறது.[5] (அதாவது, தாயை அறுப்பது போலவே அதன் வயிற்றிலிருக்கும் கன்றையும் அறுத்தல் வேண்டும் என்ற கருத்தை இது கொடுக்கிறது - மொழி பெயர்ப்பாளர்)

இந்த வகையில் இரு பகுதியோடும் தொடர்புடைய பல எடுத்துக் காட்டுகளை இவ்வகைச் சட்டங்களில் காணமுடியும்.

முஜ்தஹிதின் அறிவாற்றல் வேறுபாட்டால் ஏற்படும் கருத்து வேறுபாட்டைப் பொறுத்தவரையில், அது மேற்கூறிய முதலாவது பகுதியை விட மிகவும் தெளிவானதும் இயல்பானதுமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக பனூகுரைழாக்கள் பற்றிய சம்பவத்தைக் குறிப் பிடலாம்:

''நபி(ஸல்) அகழிப் போரிலிருந்து திரும்பிவந்ததும் ஜிப்ரீல் (அலை) வந்து பனூகுறைழாக்களைத் தாக்கச் செல்லுமாறு அவசரப் படுத்தினார்கள். அப்போது நபி(ஸல்) தம் நபித்தோழர்களை நோக்கி, 'அஸரை பனூகுறைழாக்களின் பூமியிலேயே தொழவேண்டும்' என்று கூறினார்கள். போகும் வழியிலேயே அஸருக்கு நேரமாகியது. அப்போது சிலர் 'நாம் பனூகுறைழாக்களின் பூமியில் தான் தொழு வோம்' என்றனர். வேறுசிலர் 'நபி(ஸல்) இதனைக் குறிக்க வில்லை. நாம் வழியிலேயே தொழுவோம்' என்றனர். நபி(ஸல்) அவர்களிடம் இதனைக் கூறியபோது அவர்கள் யாரையுமே கண்டிக்கவில்லை. இக்கருத்து வேறுபாட்டை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்.''[6]

---

5. அந்நிஹாயா பீ கரீபில் ஹதீஸ், தொகுதி 2, பக். 164.
6. பத்ஹுல் பாரி, தொகுதி 8, பக். 411.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே வசனத்தை விளங்குவதில் நபி(ஸல்) அவர்களோடு மிகவும் நெருங்கிய தோழர்கள் கூட கருத்து வேறுபாடு கொண்டனர். அவர்களில் சிலர் குறிப்பிட்ட வசனத்தின் வெளிப்படைக் கருத்தை நோக்கி தொழுகையை வேண்டுமென்றே பிற்படுத்தினர். மற்றும் சிலர் வழியிலேயே தொழுதனர். இக்கருத்தை நபி(ஸல்) அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இவ்விரு பிரிவினர்களில் எந்தப் பிரிவினர் விளங்கியது சரி என்பதிலும் கருத்து வேறுபாடு நிலவுவதைக் காண முடிகிறது. இமாம் இப்னு கையூம் போன்றோர் இரண்டாவது பிரிவினர் விளங்கியதே சரி என்கின்றனர்.

ஹஜ்ஜின் வழிமுறைகளை மேலும் ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடியும். நபி(ஸல்) ஒரேயொரு முறைதான் ஹஜ் செய்தார்கள். அந்த ஹஜ்ஜின் மூலமே அதன் வழிமுறைகளை நபித்தோழர்கள் அறிந்தனர். எனினும் ஹஜ்ஜின் வழிமுறைகள் பற்றிய பெரும் கருத்து வேறுபாடு களை நபித்தோழர்கள், தாபிஈன்கள், இவர்களின் பின்னால் வந்த முஜ்தஹிதுகளிடத்தில் நாம் காணமுடிகிறது. இக்கருத்து வேறுபாடு களுக்கான காரணம் இவைபற்றி வரும் அறிவிப்புகளில் காணப்படும் வேறுபாடுகளும் அச்சட்டங்களை விளக்குவதில் அவர்களிடையே காணப்பட்ட அறிவுத் தர வேறுபாடுகளுமாகும்.

சிலர் ஹஜ்ஜின் நடைமுறைகளில் சிலவற்றை வாஜிபெனவும் வேறு சிலர் அவற்றையே ஸுன்னாவெனவும் கருதினர். இத் தீர்மானங்களுக்கு வர அச்செயல்களோடு ஒட்டியிருந்த சந்தர்ப்ப, சூழ்நிலைகளை விளங்கும் முறையே காரணம் எனலாம். விரிவஞ்சி மேலதிக எடுத்துக்காட்டுகள் தரப்படவில்லை.

பிக்ஹ் கலையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கான மூன்றாவது காரணம்: முரண்பட்டதாகத் தோன்றும் சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதில் தோன்றும் கருத்து வேறுபாடு

வெளிப்படையில் சில சட்ட வசனங்கள் முரண்பட்டதாகத் தோன்றுவதுண்டு. இந்நிலையில் இவற்றிடையே இணக்கம் காண்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றும். சிலவேளை ஒரு சட்டவசனத்தை விட வேறொன்றை உறுதிப்படுத்திவிடுவதும் உண்டு. இந்தச் செயல்பாட்டின்போது சட்டங்களில் வேறுபாடு தோன்றுவது இயல்பு.

உண்மையில், இஸ்லாமிய ஷரீஅத்தில் முரண்பாடுகள் காணப்பட முடியாது. அதன் சட்டவசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வையாக அமைந்திருப்பது சாத்தியமில்லை. குர்ஆன் வசனங்களோ, ஹதீஸ் வசனங்களோ ஒன்றுக்கொன்று முரண்பட்டு அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையில் மனித அறிவுக்கு முரண்பட்டதாகத் தோன்றும் சட்டவசனங்களிடையே அறிஞர்கள் எப்போதும் இணக்கம் காணவே முனைவர். எந்தவகையிலும் இணக்கம் காணமுடியாத போதுதான் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்தி மற்றவற்றை விட்டுவிடுவர்.

சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதும் ஒன்றை விட்டு ஒன்றை உறுதிப்படுத்துவதும் மிக நுணுக்கமான கலையாகும். இது மிக நுட்பமான சிந்தனையை வேண்டி நிற்கிறது. இணக்கம் காண்பதற்கு ஒருவர் கையாளும் வழிமுறை இன்னொருவரின் சிந்தனையில் தோன்றாதிருக்கலாம். ஒருவர் இணக்கம் கண்ட வழிமுறையை இன்னொருவர் ஏற்காதும் விடலாம். ஒருவர் இணக்கம் காணமுடியாமல் ஒன்றை உறுதிப்படுத்தி மற்றதை விட்டிருக்க, வேறொருவரோ அவை இரண்டிற்கு மிடையே இணக்கம் கண்டிருப்பார். எனவேதான் இம்மூன்றாவது காரணம் சட்டங்களிடையே கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இது மிகவும் சிக்கலானதாக இருப்பதால்தான் சிலர், முஜ்தஹிதுகள் இணக்கம் கண்ட வழிமுறைகளை அறியாமலோ அல்லது அவர்கள் ஒரு சட்ட வசனத்தை உறுதிப்படுத்தி மற்றதை விட்டுவிட்டதற்கான காரணத்தை உணராமலோ, 'அவர்கள் ஹதீஸுக்கு மாற்றமாக நடந்தனர் அல்லது ஹதீஸை விட்டுவிட்டனர்' என்று குறை கூறுகின்றனர்.

முரண்பட்டவையாகத் தோன்றும் சட்டவசனங்களிடையே அறிஞர்கள் எவ்வாறு இணக்கம் காண முயன்றார்கள் என்பதை மாத்திரம் இங்கு நோக்குவோம். இமாம்கள் தாங்கள் வகுத்துக்கொண்ட அடிப்படை விதிகளோடு சட்டங்கள் முரண்படும்போது எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை அடுத்த பகுதியில் ஆராய்வோம். சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றியமைக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

முரண்பாடாகத் தோன்றும் சட்ட வசனங்கள் ஒன்றை விட ஒன்று உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றி உஸுலுல் பிக்ஹ் அறிஞர்கள் தங்களது நூல்களில் விரிவாக விளக்கியுள்ளனர். சிலர் அவற்றை நான்கு முக்கிய பிரிவுகளில் அடக்குவர். அவையாவன:

1. முரண்பட்டதாகத் தோன்றும் சட்ட வசனங்களின் அறிவிப்பாளர் வரிசை(ஸனது)களை நோக்கி இவற்றை உறுதிப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக முதவாதிரான* வழியில் வந்த ஒரு சட்ட வசனமும் மஷ்ஹூர் வழியில் வந்த ஒரு சட்ட வசனமும் முரண்பட்டால் முதவாதிர் ஏற்கப்பட்டு மஷ்ஹூர் விடப்படும்.

2. உறுதிப்படுத்தல் குறிப்பிட்ட சட்ட வசனத்தையே சார்ந்ததாகவும் இருக்கலாம். உதாரணமாக இரு சட்ட வசனங்கள் முரண்படுகின்றன என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொள்வோம். அவற்றிலொன்று செய்யுமாறு ஏவும் கட்டளையாகவும், மற்றது வேண்டாமெனத் தடுப்பதாகவும் இருந்தால் இங்கு வேண்டாமெனத் தடுக்கும் வசனமே உறுதிப்படுத்தப்பட வேண்டும். மற்றது விடப்பட வேண்டும்.

3. உறுதிப்படுத்தல் சட்ட வசனம் கொடுக்கும் கருத்தைப் பொறுத்ததாகவும் அமையலாம். ஒன்று ஆகுமானது(ஹலால்) என்ற கருத்தையும் மற்றது விலக்கப்பட்டது(ஹராம்) என்ற கருத்தையும் கொடுக்குமானால் விலக்கப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆகுமானது என்பது விடப்பட வேண்டும்.

4. உறுதிப்படுத்தல் சட்ட வசனத்தோடோ, அறிவிப்பாளர் தொடரோடோ சம்பந்தப் படாததாகவும் அமையலாம். எடுத்துக்காட்டு, இரண்டு சட்டவசனங்கள் முரணபடும்போது அவற்றில் ஒன்று கூறும் கருத்துக்கு அல்குர்ஆன் அல்லது ஸுன்னாவிலுள்ள அல்லது வேறு மூலாதாரங்களிலுள்ள ஒரு கருத்து ஆதரவாக அமைந்தால் இது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த வகையில் சட்ட விதிகள் பற்றி ஆராயும் நூல்கள் இதனை மேலும் விரிவாக விளக்கியுள்ளன.[7]

சட்டவசனங்களிடையே காணப்படும் முரணபாடுகளுக்கும், அவற்றிடையே இணக்கம் காண முற்படும்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கும் கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன:

**1. சூரிய, சந்திர கிரகணத் தொழுகைகளும் அவற்றில் கிராஅத் ஓதுதலும்**

இமாம் மாலிக், ஷாபிஈ, அஹ்மத் என்போரும் ஹிஜாஸின் மிகப் பெரும்பாலான சட்ட அறிஞர்களும் 'சூரிய, சந்திர கிரகணத் தொழுகைகள் ஒவ்வொன்றும் தலா இரண்டு ரக்அத்களைக் கொண்டவை' என்றும் 'ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ருகூஉகள் உள்ளன' என்றும் கருதுகின்றனர். ஆனால், இமாம் அபூஹனிபாவும் கூபாவின் சட்ட அறிஞர்களும் 'சூரிய, சந்திர கிரகணத் தொழுகைகள் தலா இரண்டு ரக்அத்களைக் கொண்டவை என்றும் ஜுமுஆ, ஈத் தொழுகைகள் போன்றே அவை நிறைவேற்றப்படவேண்டும்' என்றும் கருதுகின்றனர்.

---

7.அல் அஹ்காம் பீ உஸூலில் அஹ்காம், தொகுதி 4, பக்.324.

★ முதவாதிர்: ஒரு குறிப்பிட்ட ஹதீஸை அறிவிப்போர் - அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கருத்தைப் பொய்யாகச் சொல்லலாம் என்று கூற முடியாத அளவுக்கு அதிகமாக இருத்தல் என்பதாகும் (சிலர் குறைந்தது ஒவ்வொரு கட்டத்திலும் அதாவது நபித்தோழர், தாபிஈன், தபஉத் தாபிஈன் பத்துபேரையாவது அறிவிப்பாளராகக் கொண்டிருக்க வேண்டும் என்பர்). மஷ்ஹூர் என்பது இந்த ஒவ்வொரு கட்டத்திலும் ஆகக் குறைந்தது மூன்று அறிவிப்பாளர்களையாவது கொண்டிருக்கின்ற ஹதீஸ்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்து வேறுபாட்டிற்குக் காரணம் சூரிய சந்திர கிரகணங்கள் பற்றி வந்திருக்கும் ஹதீஸ்கள் பல்வேறு வகைப்பட்ட முறையில் வந்துள்ளமையாகும். இரண்டு ரக்அத்கள் கொண்ட இத்தொழுகையில் ஒவ்வொரு ரக் அத்திலும் இரு ருகூஉகள் காணப்பட வேண்டும் என்பதை ஆயிஷா(ரலி) அறிவிக்கும் கீழ்வரும் ஹதீஸ் காட்டுகின்றது:

''நபி(ஸல்) அவர்கள் காலத்தில் ஒருமுறை சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் மக்களை ஒன்றுகூட்டி தொழுவித்தார்கள். அத்தொழுகையின்போது நிலையில் நீண்டநேரம் நின்றார்கள். பிறகு ருகூஉ செய்தார்கள். அதிலும் நீண்டநேரம் இருந்தார்கள். பிறகு நிலைக்கு வந்தார்கள். அதிலும் நீண்ட நேரம் தரித்தார்கள். எனினும் முன்னைய நிலையில் நின்ற நேரத்தைவிட அது குறைவாகவே இருந்தது. பிறகு ருகூஉ செய்தார்கள். நீண்டநேரம் அதில் கழித்தார்கள். எனினும், முன்னைய ருகூஉவில் கழித்த நேரத்தைவிட அது குறைவாகவே இருந்தது......''

இதே வகையான அமைப்பில் இப்னு அப்பாஸ்(ரலி) ஒரு ஹதீஸை அறிவித்துள்ளார். இவை இரண்டும் புகாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் பதியப்பட்டுள்ளன.

இமாம் அபூஹனிபாவும், கூபா சட்ட அறிஞர்களும் தமது கருத்துக்கு ஆதரவாக அபூபக்ரா போன்ற நபித்தோழர்கள் பலர் அறிவித்த ஆதார பூர்வமான ஹதீஸ்களைக் காட்டுகின்றனர். அவற்றில் ஏனைய தொழுகைகளைப் போன்றே நபி(ஸல்) சூரிய, சந்திர கிரகணத் தொழுகைகளையும் நடத்தினார்கள் என வந்துள்ளது.

இமாம் இப்னு அப்துல் பர் மேற்குறிப்பிட்ட ஆயிஷா, இப்னு அப்பாஸ்(ரலி) ஆகியோர் அறிவிக்கும் ஹதீஸ்களைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்:

''இந்த இரு ஹதீஸ்களும் இவ்விடயம் பற்றி வந்துள்ள ஹதீஸ்களில் மிக ஆதாரபூர்வமானவையாகும். அறிவிப்பாளர் தொடர்(ஸனத்) அடிப்படையில் இதற்கு முரண்படுகின்ற ஏனைய ஹதீஸ்களை விட இந்த ஹதீஸ்களை உறுதிப்படுத்தியோர் சூரிய, சந்திர கிரகணத் தொழுகைகள் ஒவ்வொன்றும் தலா இரண்டு ரக் அத்கள் கொண்ட, ஒவ்வொரு ரக் அத்திலும் இரண்டு ருகூஉகள் காணப்படுகின்ற தொழுகைகளாகும் என்கின்றனர்...''

பின்னர் இதற்கு முரண்படுகின்ற ஏனைய ஹதீஸ்கள் பற்றிக் கூறும்போது கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''இவை அனைத்தும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களே. இவற்றில் மிகவும் ஆதாரபூர்வமானது அபூகிலாபா நுஃமான் இப்னு பஷீர்(ரலி) அறிவித்ததாக வரும் கீழ்வரும் ஹதீஸாகும்: ''நபி(ஸல்) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகிரகணத் தொழுகையை ஏனைய சாதாரண தொழுகைகள் போன்றே ருகூஉ, ஸுஜூது செய்து இரண்டு ரக்அத்களாகத் தொழுவித் தார்கள். மேலும் சூரியன் தோன்றும்வரை அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள்.'' இந்த வகையான ஹதீஸ்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றதாலும் ஏனைய தொழுகைகளோடு ஒத்துவருபவையாகவும் உள்ளன என்ற வகையில் இவற்றை உறுதிப்படுத்தியவர்கள் சாதாரண தொழுகைகள் போன்றே இரண்டு ரக்அத்களைக் கொண்டவை என்றனர்.''[8]

இன்னும் சில அறிஞர்கள் இன்னொரு கோணத்திலிருந்து நோக்கினர். முரண்பட்ட இந்த சட்ட வசனங்களிடையே இணக்கம் காண அவர்கள் முனைந்தனர். அவர்களில் இமாம் இப்னு ஜரீர் அத்தபரீயும் ஒருவர். அவர்,

''இவ்விரண்டு முறைகளிலுமே சூரிய, சந்திர கிரகணத் தொழுகை களை நிறைவேற்ற முடியும். ஒருவர் இவையிரண்டில் எதனைப் பின்பற்றித் தொழுதாலும் அது சரியானதே''[9] என்றார்.

காழி இயாழ் இக்கருத்து பற்றிக் கூறும்போது பின்வருமாறு தெரிவிக்கிறார்:

''இதுவே மிகவும் ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்து. ஏனெனில் சட்ட வசனங்களில் ஒன்றை மறுத்து மற்றொன்றை ஏற்பதை விட அவற்றிடையே இணக்கம் காண்பதே சிறந்தது.''[10]

சூரிய சந்திர கிரகணத் தொழுகைகளில் ஓதும் முறை பற்றியும் இதே வகையிலான கருத்து வேறுபாடு வந்துள்ளது. இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ போன்றோர் மெதுவாக ஓதவேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இமாம் அபூயூஸுப், முஹம்மத் இப்னு ஹஸன், அஹ்மத், இஸ்ஹாக் போன்றோர் சப்தமிட்டு ஓதவேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

இக்கருத்து வேறுபாட்டிற்குக் காரணம், இதுபற்றி பல்வேறுபட்ட ஹதீஸ்கள் வந்துள்ளமையே என இப்னு ருஷ்த் குறிப்பிடுகிறார். தபரீ இதுபற்றிக் கூறும்போது ''சப்தமிட்டும், மெதுவாகவும் விரும்பியவாறு இத்தொழுகைகளில் ஓதமுடியும்'' என்று கூறுகின்றார்.[11]

**2. மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்குதல் அல்லது பின்னோக்குதல் பற்றிய சட்டம்.**

இவ்விடயம் பற்றி பல கருத்துகள் நிலவுகின்றன. இமாம் ஷௌகானி,

---

8.பிதாயதுல் முஜ்தஹித் , தொகுதி 1,பக்.215.

9.பிதாயதுல் முஜ்தஹித், தொகுதி 1, பக்.215.

10. பிதாயதுல் முஜ்தஹித், தொகுதி 1, பக். 89,90.

11.நைலுல் அவ்தார், தொகுதி 1, பக். 157.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எட்டுக் கருத்துகள் இது பற்றி நிலவுகின்றன' என்றார். இப்னு ருஷ்த், 'மூன்று கருத்துகளே நிலவுகின்றன' என்றார். அம்மூன்று கருத்துகளும் வருமாறு:

1. மலஜலம் கழிக்கும்போது எந்த வகையிலும் கிப்லாவை முன்னோக்கவோ அல்லது பின்னோக்கவோ கூடாது.

2. மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்கவும் முடியும். பின்னோக்கவும் முடியும்.

3. மலஜலக் கூடங்கள் கட்டிடங்களாக அமைந்திருப்பின் கிப்லாவை முன்னோக்க அல்லது பின்னோக்க முடியும். ஆனால் பாலைவனம் போன்ற வெட்ட வெளிகளிலே அது கூடாது.

இக்கருத்து வேறுபாட்டிற்குக் காரணம் வெளிப்படையில் நோக்கும் போது ஹதீஸ்கள் முரண்பட்டு வந்துள்ளமையே ஆகும். எடுத்துக் காட்டாக கீழ்வரும் ஹதீஸ்களைக் கூறலாம்:

1. அபூஹுரைரா(ரலி), நபி(ஸல்) கூறியதாக அறிவிக்கிறார்: ''நீங்கள் மலஜலம் கழிக்க அமர்ந்தால் கிப்லாவை முன்னோக்கவோ அல்லது பின்னோக்கவோ வேண்டாம். கிழக்கையோ, மேற்கையோ நோக்கித் திரும்புங்கள்.'' (இவை மதீனாவை உத்தேசித்து கூறப்பட்ட திசைகள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.) (முஸ்லிம், அஹ்மத்)

2. அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்: ''நான் எனது சகோதரி ஹப்ஸா(ரலி)வின் வீட்டுக்குச் சென்றேன். அங்கே நபி(ஸல்) அவர்கள் ஷாமை முன்னோக்கி, கிப்லாவைப் பின்னோக்கி இரண்டு கற்கள் மீது மலஜலம் கழிப்பதைக் கண்டேன்.'' (புகாரி, முஸ்லிம்)

இப்பிரச்சனை பற்றி விளக்கும்போது இப்னு ருஷ்த் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

''இவ்விரண்டு ஹதீஸ்களையும் பொறுத்தவரையில் அறிஞர்கள் மூன்று வகையான கருத்துகளைக் கொண்டுள்ளனர்.

1. ஹதீஸ்கள் எதனையும் விடாது அவற்றிடையே இணக்கம் காண முனைவோர் அபூஹுரைரா(ரலி) அறிவித்த ஹதீஸ் மறைவற்ற வெட்ட வெளிகளில் மலம் கழித்தலையே குறிக்கும். இப்னு உமர்(ரலி) அறிவித்த ஹதீஸ் மறைவுள்ள மலஜலக் கூடம் போன்ற நிலைகளில் கிப்லாவை முன்னோக்கவோ, பின்னோக்கவோ முடியும் என்பதைக் காட்டுகின்றது என்றனர். இது இமாம் ஷாபிஈ, இமாம் மாலிக், அப்பாஸ், இப்னு உமர்(ரலி), ஷஃபீ, இஸ்ஹாக், அஹ்மத் போன்றோரது கருத்தாகும்.

2. வேறு சிலர் அபூஹுரைரா(ரலி) அறிவித்த ஹதீஸை உறுதிப்

---

12. பிதாயதுல் முஜ்தஹித், தொகுதி 1, பக். 157.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினர். இதற்கு அவர்கள் கீழ்வருமாறு காரணம் கூறினர்:

இங்கு இரண்டு ஹதீஸ்கள் முரண்பட்டு ஒன்றில் ஒரு புதிய சட்டம் நிறுவப்படுகின்றது. மற்றையது, 'சட்டங்கள் வருவதற்கு முன்பு அடிப்படையில் மனிதர்கள் கடமைகள், பொறுப்புகள் அற்றவர்கள்' என்ற இஸ்லாமியச் சட்ட அடிப்படை விதியொன்றுக்கு ஏற்ப இரு ஹதீஸ்களில் எது முந்தியது, எது பிந்தியது எனவும் அறியப்பட வில்லை. இவ்வேளை புதியதொரு சட்டத்தை நிறுவும் ஹதீஸை ஏற்பதே பொருத்தமானது. இதுவே உமர்(ரலி), முஜாஹித், நகஈ, ஸவ்ரி போன்றோரது கருத்தாகும்.

3. இன்னும் சிலர் ஹதீஸ்கள் முரண்படும்போது 'சட்டங்கள் வருவதற்கு முன்பு அடிப்படையில் மனிதர்கள் கடமைகள், பொறுப்புகள் அற்றவர்கள்' என்ற விதியை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும் என்கின்றனர். இந்த வகையில் மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்கவோ பின்னோக்கவோ முடியும். இது தாவுத் ளாஹிரியின் கருத்தாகும். உர்வா இப்னு ஸுபைர், இமாம் மாலிக்கின் ஆசிரியர் ரபீஆ ஆகியோரும் இதே கருத்தைக் கொண்டிருந்ததாக இமாம் நவவி முஸ்லிமின் விரிவுரையில் குறிப்பிடுகின்றார்.''

**3. இமாமுக்குப் பிறகு மஃமூம் 'பாத்திஹா' அத்தியாயத்தை ஓதுதல் பற்றிய கருத்து வேறுபாடு.**

இவ்விடயத்திலும் மூன்று கருத்துகள் நிலவுகின்றன.

1.எல்லாத் தொழுகைகளிலும் இமாம் மெதுவாக ஓதும் தொழுகையாயினும் சரி, சப்தமிட்டு ஓதும் தொழுகையாயினும் சரி பின்தொடர்ந்து தொழுபவர்(மஃமூம்) பாத்திஹாவை ஓதவேண்டும். இது இமாம் ஷாபிஈ, அஹ்மத் ஆகியோரது கருத்தாகும்.

2. எந்தத் தொழுகையிலும் பின்தொடர்ந்து தொழுபவர் (மஃமூம்) பாத்திஹாவை ஓதக்கூடாது. இது இமாம் அபூஹனிபாவின் கருத்தாகும்.

3. இமாம் மெதுவாக ஓதும் தொழுகைகளில் மஃமூம் பாத்திஹாவை ஓத வேண்டும். சப்தமிட்டு ஓதும் தொழுகைகளில் பாத்திஹாவை ஓதக்கூடாது.

இக்கருத்து வேறுபாட்டிற்குக் காரணம், சட்டவசனங்கள் வேறுபட்ட முறையில் வந்திருப்பதேயாகும். சிலர் ஹதீஸ்களில் சிலவற்றை உறுதிப்படுத்தி வேறு சிலவற்றை விட்டு விட்டனர். வேறு சிலர் இந்த ஹதீஸ்களிடையே இணக்கம் கண்டனர். இந்த வகையில் இமாமின் பின்னால் இருக்கும் மஃமூம் ஓத வேண்டும் என்று வந்த ஹதீஸ்கள் மெதுவாக ஓதும் தொழுகைகளைக் குறிக்கின்றன என்றும், மஃமூம் ஓதக்கூடாது என்று வந்த ஹதீஸ்கள் சப்தமிட்டு ஓதும் தொழுகைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கின்றன எனவும் இவர்கள் கூறினர். இதுவே இமாம் மாலிக் போன்றோரின் கருத்தாகும்.[12]

இமாம் திர்மிதி கீழ்வருமாறு கூறுகின்றார்:

''இமாமுக்குப் பிறகு பின்தொடர்ந்து தொழுபவர்(மஃமூம்) அத்தியாயம் பாத்திஹாவை ஓதுவது பற்றி அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். நபி(ஸல்) அவர்களது தோழர்கள், தாபிஈன்கள், பின்னால் வந்த இமாம்களில் பெரும்பாலானோர் இமாமின் பின்னால் நின்று தொழுபவர்கள் பாத்திஹாவை ஓதவேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர். இமாம் மாலிக், ஷாபிஈ, அஹ்மத், இப்னுல் முபாரக், இஸ்ஹாக் போன்றோரின் கருத்தும் இதுவாகும்.''

இமாம் இப்னு முபாரக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''நான் இமாமுக்குப் பிறகு ஓதுகிறேன். கூபாவாசிகளில் சிலர் தவிர ஏனையோர் இவ்வாறே செய்கின்றனர். இமாமுக்குப் பிறகு மஃமூம் ஓதாவிட்டாலும் அவரது தொழுகை நிறைவேறும் என்பதுவே என் கருத்து.''[13]

இமாம் இப்னு முபாரக் ஆதாரங்கள் இருபக்கமும் சமமாகக் காணப் படுவதால் இந்த ஹதீஸ்களிடையே இணக்கம் காண முனைகிறார் போல் தோன்றுகிறது. பாத்திஹாவை பின்தொடர்ந்து தொழுபவர்கள் இமாமுக்குப் பிறகு ஓதவேண்டும் எனக் கட்டளையிடும் ஹதீஸ்கள் அதனை வாஜிபென்ற கருத்தில் கூறவில்லை. மாறாக அது ஸுன்னா என்ற கருத்திலேயே கூறுகின்றன. இந்த வகையில், இமாமின் பின்னால் நிற்பவர் பாத்திஹா ஓதாவிட்டாலும் அவரது தொழுகை நிறைவேறும் என இமாம் இப்னு முபாரக் கருதியிருக்க வேண்டும்.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளிலிருந்து, முரண்பாடாகத் தோன்றும் சட்டவசனங்களிடையே இணக்கம் காண முனையும்போது உருவாகின்ற கருத்து வேறுபாடுகள் பற்றி ஓரளவு விளங்கிக் கொள்ளலாம். சட்டங் களிடையே கருத்து வேறுபாடு தோன்ற அது ஒரு முக்கிய காரணம் எனவும் கூறலாம். இக்கருத்து வேறுபாட்டை ஒழிப்பது சாத்தியமானது அல்ல என்பதும் தெளிவாகும். எனவே எந்த ஓர் இமாமும் ஆதார பூர்வமான ஒரு சட்ட வசனத்தை வேண்டுமென்றே விட்டுவிடுவது கிடையாது. அதற்கு முரணான வேறொரு சட்டவசனம் வந்திருப்பதைக் கண்டு அவற்றிடையே இணக்கம் காண முடியாதபோது மாத்திரமே அவற்றில் ஏதாவதொன்றை உறுதிப்படுத்துவார். இது முஜ்தஹித்களின் ஒன்றுபட்ட உடன்பாடான கருத்தாகும்.

---

13. துஃபதில் அஹ்வதி , தொகுதி 2, பக். 237.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மூலாதாரங்கள், விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடு

பிக்ஹ் கலையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கான நான்காவது காரணம்

இஸ்லாமிய நடைமுறைச் சட்டங்களில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கு ஏதுவாக அமைந்த இறுதிக் காரணம் இதுவாகும். முஜ்தஹித்களான இமாம்கள் சில சட்ட மூலாதாரங்கள், சட்டம் பெறுவதற்கான அடிப்படை விதிகள் என்பவற்றில் கருத்து வேறுபாடு கொண்டார்கள் என்பது நிறுவப்பட்ட உண்மையாகும். எடுத்துக்காட்டாக, இமாம் மாலிக் மதீனாவாசிகளின் ஏகோபித்த முடிவை (இஜ்மா) ஒரு சட்ட மூலாதாரமாகக் கொண்டார். ஆனால், ஏனைய இமாம்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு சட்ட வசனத்தின் எதிர்மறைப் பொருளைச் (மப்ஹூம் அல் முகாலபா) சட்டங்கள் பெற ஒரு விதியாகக் கொள்ளலாம் என்ற பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தை இமாம் அபூஹனிபா ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு பொதுச் சொல்(அல்ஆம்) கொடுக்கும் பொருளை, குறிப்பான கருத்தைக் கொடுக்கும் தனிச் சொல்லோடு(அல்காஸ்) ஒத்து நோக்கியே சட்டம் பெறவேண்டும் என்ற பெரும்பாலான அறிஞர்களின் கூற்றை ஹனபிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. எத்தகைய வரையறைகளும் இடாமல் வரும் சொல்லை(அல்முத்லக்), வரையறைகளோடு வரும் சொல்லோடு(முகய்யத்) ஒப்பிட்டு நோக்கியே சட்டம் பெற வேண்டும் என்ற கருத்தையும் ஹனபிகள் ஏற்கவில்லை. ஓர் அறிவிப்பாளர்(ராவி) தனது அறிவிப்பிற்கு மாற்றமாகச் செயல்பட்டால் அவரது செயலையே சட்டம் பெற அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது ஹனபிகளின் விதி. ஆனால், இதனை ஏனைய பல சட்ட அறிஞர்கள் ஏற்கவில்லை. இவ்வாறு சட்டம் பெறுவதற்கான பல அடிப்படை விதிகளிலும் சட்ட மூலாதாரங்களிலும் இமாம்கள் கருத்து வேறுபாடு கொண்டனர். சட்ட மூலாதாரங்கள், விதிகள் பற்றிய நூல்கள் இதனைத் தெளிவாக விளக்குகின்றன.

இஸ்லாமியச் சட்டங்களில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கு இக்காரணம் ஒரு முக்கிய ஏதுவாக இருந்தமையால்தான் நவீனகால அறிஞர்கள் இதுபற்றி ஆராய்கின்றனர். இந்த அடிப்படையில்தான் அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் 'உஸூல் அல்பிக்ஹ்' பாடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தில் 'அடிப்படைச் சட்ட விதிகளில் தோன்றிய கருத்து வேறுபாடுகள் நடைமுறைச் சட்டங்களில் ஏற்படுத்திய தாக்கம்' என்ற தலைப்பு சேர்க்கப்பட்டுள்ளது. டாக்டர் முஸ்தபா ஸயீத் அல்-ஆன் தமது முனைவர் பட்டத்துக்கான தேர்வில் இது பற்றி விரிவானதோர் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். இவ்விடயம் பற்றி ஆராய் வோருக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாகப் பயன்படும்.

இக்காரணம் எவ்வளவு தூரம் சட்டங்களில் கருத்து வேறுபாட்டை விளைவிக்கும் என்பதற்கு இங்கு நாம் சில எடுத்துக்காட்டுகளை மட்டும் தருகிறோம்.

மதீனாவாசிகளின் செயல் [அமலு அஹ்லில் மதீனா]

ஒரு குறிப்பிட்ட விடயத்தில் மதீனாவாசிகளின் செயல்பாடு ஏகோபித்த முடிவாக(இஜ்மா) அமைந்திருக்குமாயின் சட்டம் பெறுவதற்கு அது ஒரு பலமான ஆதாரம் என இமாம் மாலிக் கருதுகிறார். இமாம் மாலிக் தமது கருத்தை நியாயப்படுத்தி அப்போது எகிப்தின் சட்ட அறிஞராக இருந்த இமாம் லைத் இப்னு ஸஃதுக்கு எழுதுகிறார்,

அல்லாஹ் பின்வருமாறு குர்ஆனில் கூறுகிறான்:

*'முஹாஜிர்கள் அன்ஸார்களில் ஆரம்பமாகவே முந்திக்கொண்டு ஈமான் கொண்டோர்கள்...' (தவ்பா: 100)*

மேலும் கூறுகிறான்:

*'சொல்வதை நன்கு கேட்டு அவற்றில் மிகச் சிறந்தவற்றைப் பின்பற்றும் எனது அடியார்களுக்கு (நபியே) நீர் நற்செய்தி கூறுவீராக...' (ஜுமர்: 17-18)*

ஹிஜ்ரத்தின் நிலம் மதீனாவே. குர்-ஆன் அங்குதான் இறங்கியது. ஆகுமானது(ஹலால்), விலக்கப்பட்டது(ஹராம்) பற்றிய சட்டங்கள் அங்குதான் விளக்கப்பட்டன. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மதீனா மக்களிடையேதான் வாழ்ந்தார்கள். இறைச்செய்தி(வஹீ) இறங்கிய போது அம்மக்கள் இருந்தார்கள். இறைத்தூதரின் கட்டளைகளையே பின்பற்றி நடந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இறையடி சேரும்வரை இந்நிலைமை காணப்பட்டது. இந்தவகையில் மக்கள் மதீனாவாசிகளைப் பின்பற்றியே நிற்கின்றனர்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களது மரணத்தின் பின்னர் அவர்களது சமூகத்தில், அவர்களை எல்லா வகையிலும் நன்கு பின்பற்றி ஒழுகியவர்கள் அச்சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றனர். அவர்களுக்கு ஏதாவதொரு பிரச்சனை தோன்றுமாயின், அது பற்றிய தீர்ப்பு அவர்களுக்குத் தெரிந்திருப்பின் அப்படியே நடைமுறைப் படுத்தினர். தெரியாதபோது ஏனையோர்களை அழைத்து வினவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது கிடைத்தவற்றில் அவர்களது இஜ்திஹாதுக்கு ஏற்ப மிக ஆதாரபூர்வமானதை நடைமுறைப்படுத்தினர். இந்நிலையிலும் அதனைவிடப் பலமான ஓர் ஆதாரம் கொண்டுவரப்பட்டபோது அதனையே பின்பற்றினர்.

''பின்னர் தாபிஈன்கள் இதே வழிமுறையைப் பின்பற்றி நடந்தனர். எனவே மதீனாவில் ஓர் அம்சம் பரவலாகவும் நடைமுறையிலும் காணப்பட்டு, அதற்கு முரண்பாடாக அங்கு ஏதும் காணப்படவில்லையாயின் அது அவர்களிடம் தொடர்ந்து வந்த, அப்பாரம்பரிய வழிமுறையையே காட்டும்.''

பெரும்பாலான இஸ்லாமியச் சட்ட அறிஞர்கள் இமாம் மாலிக் அவர்களின் இச்சட்ட மூலாதாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏகோபித்தமுடிவு(இஜ்மா) என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நிகழ்வதைக் குறிக்காது. மாறாக அனைத்து முஜ்தஹிதுகளினதும் ஒருமைப்பாட்டையே குறிக்கும் என அவர்கள் கருதுகின்றனர். இது சம்பந்தமாக விரிவான விளக்கங்களைச் சட்ட மூலாதாரங்கள் பற்றி விளக்கும் நூல்களில் பார்க்கலாம்.[1]

இச்சட்ட மூலாதாரத்தில் இவ்வாறான கருத்து வேறுபாடு காணப்படுகின்றமையால், நடைமுறைச் சட்டங்களிலும் இதனடியாகப் பல கருத்து வேறுபாடுகள் தோன்றுவதை நாம் அவதானிக்க முடியும். இதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கீழே தருகிறோம்:

1. தாயின் சகோதரர்கள், தந்தையின் சகோதரர்கள் போன்ற உறவினர்கள் வாரிசுச் சொத்துரிமை பெறமாட்டார்கள் என இமாம் மாலிக் கருதுகிறார். மதீனாவாசிகளின் செயல்பாடு அவ்வாறு அமைந்திருந்தமையே இதற்கான காரணமாகும். ஹனபி, ஹன்பலி போன்ற மத்ஹப்களின் இமாம்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இத்தகைய உறவினர்கள் வாரிசுரிமைச் சொத்தில் பங்கு பெறுவார்கள் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

''அல்லாஹ்வின் வேதத்தின் கட்டளையின்படி உறவினர்களே ஒருவரை ஒருவர் மிக நெருங்கியவர்களாவர்'' (அன்ஃபால்: 75)

என்ற இறைவசனத்தின் பொதுவான கருத்து தமது கருத்துக்கு ஆதாரமாக அமைவதாக இவர்கள் கூறுகின்றனர்.

கீழ்வரும் ஹதீஸையும் இதற்கு ஆதாரமாக அவர்கள் காட்டுகின்றனர். அபூஉமாமா இப்னு ஸஹ்ல்(ரலி) அறிவிக்கிறார்கள்,

''உமர்(ரலி), அபூஉபைதா(ரலி) அவர்களுக்குக் கீழ்வருமாறு எழுதினார்கள்,

1. ஆமிதி, அல் அஹ்காம், பாகம் 1, பக். 349.
பவாதிஹ் அல் ரஹ்முத், பாகம் 2, பக். 232.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொறுப்பாளர் இல்லாதவருக்கு அல்லாஹ்வும் அவனது தூதருமே பொறுப்பாளராவர். தாயின் சகோதரர் வாரிசு இல்லாதவருக்கு வாரிசாவர்.'' (திர்மிதி, இப்னு ஹிப்பான், அஹ்மத்)[2]

இமாம் மாலிக் தமது நூலான முவத்தாவில் தனது ஆதாரத்தைப் பின்வருமாறு காட்டுகின்றார்:

''தாயின் சகோதரரின் மகன், தாயின் தந்தையாகிய பாட்டன், தந்தையின் சகோதரர், தாயின் சகோதரர், தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி ஆகியோர் தங்களது உறவினர்களின் சொத்தில் எத்தகைய வாரிசுரிமையும் அற்றவர்கள் என்பதே எமது பிரதேச அறிஞர்களின் கருத்தும், எம்மிடம் கருத்து வேறுபாடற்ற ஒருமைப் பாடான கருத்துமாகும்.''

2. இரு பெருநாள் தொழுகைகளின் முதலாவது ரக்அத்தில் ஏழு தக்பீர்களும் இரண்டாவது ரக்அத்தில் ஸுஜூதிலிருந்து எழும்பும்போது சொல்லும் தக்பீரோடு ஆறு தக்பீர்களும் உள்ளன என்ற கருத்தை இமாம் மாலிக் கொண்டுள்ளார். இதற்கு இவர் இரு ஆதாரங்களைக் காட்டுகிறார், இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்:

(அ) ''நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகளை நான் அபூஹுரைராவோடு தொழுதேன். அவர் அத்தியாயம் ஓது முன்னால் ஏழு தக்பீர்களும் அடுத்த ரக்அத்தில் ஓது முன்னால் ஐந்து தக்பீர்களும் கட்டினார்.''[3]

(ஆ) மதீனா மக்களின் செயல்பாடு இந்த அமைப்பிலேயே காணப்பட்டது.

3. ஆயிஷா(ரலி) பின்வருமாறு கூறுகிறார்:

''பத்துமுறை பால் கொடுப்பதே இரத்த உறவை ஏற்படுத்தும் என்று குர்ஆனில் ஆரம்பத்தில் இருந்த கருத்து பின்னர் ஐந்தாக மாற்றப்பட்டது. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மரணமடையும்போது கூட குர்ஆனில் ஓதப்படும் ஒரு பகுதியாக இது காணப்பட்டது.''

இந்த அறிவிப்பு கூறும் அடிப்படையில் மதீனாவாசிகளின் செயல் பாடில்லை என இமாம் மாலிக் கூறினார் என்று யஹ்யா கூறுகிறார்.[4] எனவே இமாம் மாலிக் பால் குடித்தல் - அது கூடுதலாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் இரத்த உறவை ஏற்படுத்தும் என்ற கருத்தைக் கொண்டுள்ளார்.[5]

---

2. அல்முவத்தா, பாகம் 1, பக்.518.

3. பிதாயத் அல் முஜ்தஹித், பாகம் 1, பக். 222.

4. அல்முவத்தா, பாகம் 3. (கிதாப் அல் ரவாஉ)

5. அல்முவத்தா, பாகம் 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒரு தோட்டத்தின் பழங்களை விற்கும்போது அவ்வற்றில் ஒரு பகுதியை நீக்கி விற்பது பற்றி இமாம் மாலிக்கின் கருத்தும் இதே அடிப் படையைக் கொண்டதாகும். இது பற்றி இமாம் மாலிக் பின்வருமாறு கூறுகிறார்:

"ஒரு மனிதர் தனது தோட்டத்தில் உள்ள பழங்கள் அனைத்தையும் விற்கும் போது அதில் 1/3 பகுதியை மட்டுமே நீக்கி விற்க முடியும். மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைந்தளவு வைத்துக் கொண்டு விற்பின் அது ஏற்புடையதே. ஆனால் மூன்றில் ஒன்றைவிடக் கூடுதலாக வைத்துக் கொண்டு விற்க முடியாது. இதுவே மதீனா வாசிகளின் செயல்பாடாகக் காணப்படுகிறது."[6]

இந்த அடிப்படையில் அமைந்த பல சட்டங்களை நாம் இமாம் மாலிக்கின் நூலான முஅத்தாவில் ஆங்காங்கே காணலாம்.

எதிர்மறைப் பொருள் கொள்ளல் பற்றிய கருத்து வேறுபாடு [மப்ஹூம் அல் முகாலபா]

குறிப்பிட்ட சட்டவசனத்தின் சொற்கள் கொடுக்கும் நேரடியான சட்டத் திற்கு எதிர்மறையான சட்டத்தை அச்சட்ட வசனமே அதன் சொற்களின் எதிர்மறைப் பொருளூடாகத் தரும்.[7] என இஸ்லாமியச் சட்ட மூலாதார அறிஞர்கள் எதிர்மறைப் பொருள் கொள்ள(மப்ஹூம் அல் முகாலபா) லுக்கு வரைவிலக்கணம் கூறுகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம்:

"பணக்காரன் கடனைக் கொடுக்காமல் தள்ளிப்போட்டுக் கொண்டே இருப்பது அநியாயம்"

என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸின் எதிர்மறைப் பொருளை எடுப்பின் அது பின்வருமாறு அமையும்:

"ஏழை கடனைச் செலுத்தாமல் தள்ளிப்போடுவது அநியாயமாகக் கணிக்கப்பட மாட்டாது."

குறிப்பிட்டதொரு சட்ட வசனத்திலிருந்து இவ்வாறு எதிர்மறைப் பொருள் கண்டு சட்டமெடுப்பது ஆதாரபூர்வமானதா என்பதில் சட்ட அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

பெரும்பாலான அறிஞர்கள் சில குறிப்பிட்ட ஷரத்துகளோடு எதிர்மறைப் பொருள் கொள்ளலை ஆதாரமாக எடுக்க முடியும் என்கின்றனர். ஆனால் ஹனபிகளும் இன்னும் சில அறிஞர்களும் இதனை ஆதாரமாகக் கொண்டு ஷரீஆ சட்டங்களை அமைக்க முடியாது என்று கூறுகின்றனர். இந்தச் சட்டவிதியில் தோன்றிய இக்கருத்து

---

6. தப்ஸீர் அத் தஹ்ரீர், பாகம் 1, பக்.146.
7. தப்ஸீர் ரூஹ் அல் மஆனி, பாகம் 5, பக்.8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாட்டால் நடைமுறைச் சட்டங்களிலும் பல கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதற்குச் சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறோம்:

1. பேரீச்சமரம் மகரந்தச் சேர்க்கை செய்யப்படும் முன்னால் விற்கப்பட்டால் அதன் பழங்களின் உரிமையாளர் யார் என்பது பற்றிய கருத்து வேறுபாடு.

இவ்விடயத்தில் கீழ்வரும் ஹதீஸ் வந்துள்ளது. இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> ''பேரீச்சமரத்தை மகரந்தச் சேர்க்கைக்கு உட்படுத்தியதன் பின்னர் யாரும் வாங்கினால் அதன் பழங்கள் விற்றவருக்குச் சொந்தமாகும். ஆயினும் வாங்குபவர் பேரீச்சம்பழங்களையும் சேர்த்து வாங்குதல் என்ற ஷரத்தோடு வாங்கினால் அவருக்கே சொந்தமாகும்.'' (புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸின் நேரடிப் பொருளின் அடிப்படையில் மகரந்தச் சேர்க்கையின் பின் விற்கப்பட்டால் பழங்கள் - வாங்குபவர் ஷரத்தாக இடாதுவிட்டால் - விற்றவருக்கே சொந்தமாகும். ஆனால் மகரந்தச் சேர்க்கையின் முன்னர் - ஹதீஸின் எதிர்மறைப் பொருளின் அடிப் படையில் - வாங்குபவருக்கே சொந்தமானது. இவ்வாறு பெரும்பாலான சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஹனபிகள் 'எதிர்மறைப்பொருளை' சட்ட ஆதாரமாகக் கொள்வ தில்லை என்ற அடிப்படையில் மகரந்தச் சேர்க்கையின் பின்னராயினும் சரி, முன்னராயினும்சரி, அது விற்றவருக்கே சொந்தமானது. வாங்குபவர் பழங்களை வாங்குவதாக ஷரத்தாக இட்டால் மட்டுமே அவருக்குச் சொந்தமாகும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

2. சுதந்திர நிலையிலுள்ள ஒரு பெண்ணை மணமுடிக்க இயலும் எனும்போது கூட வேதம் வழங்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த (அஹ்லுல் கிதாப்) ஓர் அடிமைப் பெண்ணை அல்லது முஸ்லிமான ஓர் அடிமைப் பெண்ணை முடிக்க இயலுமா? என்ற பிரச்சனையையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சுதந்திரமான ஒரு பெண்ணை மணமுடிக்க முடியாத போதுதான் ஓர் அடிமைப் பெண்ணை மணமுடிக்க முடியும் என்ற கருத்தை, பெரும்பாலான சட்ட அறிஞர்கள் கொண்டுள்ளனர். இதற்கு ஆதாரமாகக் கீழ்வரும் இறைவசனத்தின் எதிர்மறைப் பொருளைக் காட்டுகின்றனர்:

> ''விசுவாசியான(முஃமின்) சுதந்திர நிலையிலுள்ள பெண்களைத் திருமணம் முடிக்க உங்களில் யாருக்கும் பண வகையில் சக்தி இல்லாமல் போனால் விசுவாசியான (முஃமின்) அடிமைப் பெண்களை அவர் திருமணம் முடித்துக் கொள்ளட்டும்.'' (நிஸா: 25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனபிகள் எதிர்மறைப் பொருளை ஆதாரமாகக் கொள்வதில்லை யாதலால், சுதந்திரமான பெண்களை முடிக்கச் சக்தி இருந்தபோதிலும், அடிமைப் பெண்களை மணம் முடிக்க முடியும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர். இதனை அல்லாமா ஆலூஸி தமது தப்ஸீரில் கீழ்வருமாறு கூறுகிறார்:

'பணவகையில் சக்தியில்லாமல் போனால்' என்ற ஷரத்து, திருவசனத்தில் காணப்படுவதால் சுதந்திரமான பெண்களை முடிக்கச் சக்தி இருக்கும்போது அடிமைப் பெண்ணை முடிக்க முடியாது. அவ்வாறே 'விசுவாசியான இளம் அடிமைப் பெண்கள்' என 'இறை நம்பிக்கை' (ஈமான்) என்ற பண்பைக் குறிப்பிட்டு வந்துள்ளமையால் வேதம் வழங்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த (அஹ்லுல் கிதாப்) அடிமைப் பெண்கள் முற்றாகவே திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப் படாதவர்கள் என்ற கருத்தே வெளிப்படையாக இத்திருவசனத்திலிருந்து பெறப்படுகிறது. முதற்கருத்தை இமாம் ஷாபிஈயும் இரண்டாவது கருத்தை ஹிஜாஸ் அறிஞர்களும் கொண்டுள்ளனர்.

எனினும் இமாம் அபூஹனிபா(ரஹ்) இந்த இரண்டு நிலைகளையும் அனுமதித்துள்ளார். ''உங்களுக்கு விருப்பமான பெண்களை மணம் முடித்துக் கொள்ளுங்கள்...'', '' அதற்கு அப்பால் உங்களுக்கு அனைத்தும் ஆகுமாக்கப்பட்டுள்ளது'' போன்ற பொதுவான கருத்தைக் கொடுக்கும் வசனங்களை அவர் ஆதாரமாகக் கொண்டார். பொதுக்கருத்தை வரையறுக்கும் வகையில் எந்தச் சட்ட வசனமும் காணப்படவில்லை என்பது அபூஹனிபாவின் கருத்து. மேலே குறிப்பிட்ட இரண்டு விதிகளும் (அதாவது எதிர்மறைப் பொருள் கொள்ளல், ஒரு குறிப்பிட்ட சொல் பண்போடு சேர்ந்து வரல்) இமாம் அபூஹனிபா விடத்தில் ஆதாரமாகக் கொள்ளப்படுவதில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக கீழ்வரும் ஹதீஸ்களைக் குறிப்பிடலாம்:

''நிராகரிப்பாளருக்காக (காஃபிர்) பழிவாங்கல் என்ற அடிப்படையில் ஒரு முஸ்லிம் கொல்லப்படக் கூடாது.'' (அலீ(ரழி): முஸ்னத் அஹ்மத், அபூதாவூத், நஸயீ)

''நிராகரிப்பாளருக்காகப் பழிவாங்கும் வகையில் ஒரு முஸ்லிம் கொல்லப்படாதிருத்தல் ஸுன்னாவாகும்.'' (முஸ்னத் அஹ்மத்)

பெரும்பாலான சட்ட அறிஞர்கள் இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் கீழ்வரும் பொதுவான குர்ஆன் வசனங்களுக்கு வரையறுத்த கருத்தைக் கொடுத்தனர்:

''விசுவாசிகளே, கொலை செய்யப்பட்டோருக்காகப் பழிவாங்கல் உங்களுக்கு விதியாக்கப்பட்டுள்ளது.''(பகரா:187)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யார் அநியாயமாகக் கொலை செய்யப்படுகிறாரோ, அவரின் வாரிசு தாரருக்கு நாம் அதிகாரத்தை வழங்கினோம்.'' (பனீ இஸ்ராயீல்: 33)

ஆனால் இமாம் அபூஹனிபா, இத்திருவசனங்கள் குறிக்கும் பொதுக் கருத்தின் அடிப்படையில், இஸ்லாமிய நாட்டில் வாழும் நிராகரிப்பாளர் (திம்மி) ஒருவரை, ஒரு முஸ்லிம் கொன்றால், அந்த முஸ்லிமைப் பழிவாங்க முடியும் என்று கூறுகின்றார். மேற்குறிப்பிட்ட இறை வசனங்கள், ஹதீஸ்கள் காட்டும் பொதுவான கருத்தை வரையறுக்காது எனவும் அவர் கூறுகிறார். அந்த ஹதீஸ்களில் வந்துள்ள நிராகரிப்பாளர் என்ற சொல் இஸ்லாமிய அரசுக்கு எதிராகப் போரிடும் நாடுகளில் வாழும் நிராகரிப்பாளரையே (ஹர்பி காஃபிர்) குறிப்பிடும் என்றும் அவர் கருதுகிறார்.

வரையறைகளோடு வரும் சொற்பிரயோகமும் வரையறை அற்ற சொற்பிரயோகமும்

ஒரு சட்டவசனத்தில் வரையறைகளோடு வரும் ஒரு சொல்லும் வேறொரு வசனத்தில் வரையறைகளின்றி ஒரு சொற்பிரயோகமும் வரக்கூடும். இந்நிலையில் இவை இரண்டையும் சில ஷரத்துகளோடு ஒப்புநோக்கியே சட்டம் பெறவேண்டும் என்பது அதிகமான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். எனினும் இமாம் அபூஹனிபா இவை இரண்டும் வெவ்வேறாகவே நோக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளார். இந்த அடிப்படை விதியில் தோன்றிய கருத்து வேறுபாட்டால் சட்டங்களிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. அதற்கான எடுத்துக்காட்டு:

அரபிகள் அக்காலத்தில் தங்களது மனைவிமாரைப் பார்த்து 'நீ எனது தாயைப் போன்றவள்' என்று கூறிவிட்டு அவளோடு எத்தகைய தொடர்பு மின்றியும் அதே நேரத்தில் அவளை, தலாக் கூறி விடுவிக்காமலும் இருந்து வந்தனர். இது பெண்களைக் கொடுமைப்படுத்துவதாக இருந்தது. எனவே இஸ்லாம் இதனைத் தடை செய்தது. இவ்வாறு சொன்னாலும் உடனே அந்தப் பெண்ணோடு சேர்ந்துகொள்ள வேண்டும் எனவும், அதேநேரத்தில் குற்றப் பரிகாரம் செய்யவேண்டும் எனவும் விதித்தது. அக்குற்றப் பரிகாரத்தில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

அடிமையை விடுதலை செய்தல் குற்றப் பரிகாரத்தில் ஓரம்சம். முஸ்லிமான அடிமையாக இருக்க வேண்டுமென்பது பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். கீழ்வரும் இரு திருவசனங்களை ஒன்றாக நோக்கி விளங்கியமையே இதற்குக் காரணமாகும்:

''தங்களது பெண்கள் தாயைப் போன்றவர்கள் எனக் கூறி விலக முனைபவர்கள், பின்னர் அவளோடு சேரும்போது அவளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடும் முன்னால் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும்....'' (முஜாதலா: 3)

''எவர் ஒரு விசுவாசியைத்(முஃமின்) தவறுதலாகக் கொன்று விடுகிறாரோ அவர் ஒரு விசுவாசங்கொண்ட அடிமையை விடுதலை செய்ய வேண்டும்.'' (நிஸா: 92)

இங்கே இரண்டாவது வசனத்தில் அடிமை என்ற சொல், இறை நம்பிக்கை(ஈமான்) என்ற வரையறையோடு வந்துள்ளது. எனவே முதல் வசனத்தில் எவ்வித வரையறையுமின்றி வந்த சொல்லுக்கு இந்த வரையறையைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர்.

இமாம் அபூஹனிபா இவற்றைத் தனித்தனியாக நோக்கி விளக்கினார். வரையறைகளோடு வரும் சட்டவசனமும் வரையறையின்றி வரும் சட்ட வசனமும் ஒன்றாக நோக்கப்பட வேண்டியதில்லை என்பது அவரது விதியாகும்.

ஹதீஸ் அறிவிப்பாளர் தமது அறிவிப்புக்கு மாற்றமாகச் செயற்படல்

ஓர் அறிவிப்பாளரின் செயல் அவரது அறிவிப்பிற்கு மாற்றமாக இருப்பின் அவரது செயல்பாட்டை ஏற்று, அறிவிப்பை விடுவதா அல்லது அறிவிப்பை ஏற்று செயலை விடுவதா? என்ற இந்தப் பிரச்சனையில் சட்ட அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டனர். பெரும்பாலான சட்ட அறிஞர்கள் அவருடைய செயல் ஏற்கப்படக் கூடாது; அறிவிப்புதான் ஏற்கப்பட வேண்டும் என்றனர். ஆனால், ஹனபிகள் செயலை ஏற்று அறிவிப்பு விடப்பட வேண்டும் என்றனர். இந்நிலையில் செயல் அந்த அறிவிப்பை மாற்ற(நஸ்கு)க்கூடியதாக உள்ளது. அல்லது அந்தக் குறிப்பிட்ட ஹதீஸின் உறுதியில் ஒரு தாக்கத்தை விளைவிக்கிறது எனக் கூறினர். இதனைக் கீழ்வருமாறு அவர்கள் விவரித்தனர்:

''ஹதீஸுக்கு மாற்றமாக நடந்த அறிவிப்பாளரின் செயல் உண்மையாயின் அந்த ஹதீஸை ஆதாரமாகக் கொள்ள முடியாது. செயல் பிழையாயின் அவரது அறிவிப்பை ஏற்க முடியாது. ஏனெனில் அவர் நேர்மையாளர் (அத்ல்) என்ற பண்பை இழக்கிறார்.''

ஹனபிகளுக்கு மாற்றமான கருத்தைக் கொண்ட ஏனைய சட்ட அறிஞர்கள் தங்களது நிலையைக் கீழ்வருமாறு நியாயப்படுத்தினர்:

''அறிவிப்பையே நாம் ஆதாரபூர்வமானதாகக் கொள்ள வேண்டும். அவரது செயலை ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், செயல் இஜ்திஹாதின்* அடிப்படையில் தோன்றியதாக இருக்கக் கூடும். இந்தத் தனிப்பட்ட இஜ்திஹாதை ஏனையோர் பின்பற்ற வேண்டு மென்று நிர்ப்பந்திக்க முடியாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படை விதியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நடைமுறைச் சட்டங்களிலும் கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்தது. இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

**1. தொழுகையில் ருகூஉக்குச் செல்லும்போதும், அதிலிருந்து மீளும்போதும் கைகளை உயர்த்தல்**

ருகூஉவுக்குச் செல்லும்போதும், அதிலிருந்து மீளும்போதும் கைகளை உயர்த்த வேண்டும் என்பது பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். இதற்கு ஆதாரமாகக் கீழ்வரும் ஹதீஸை அவர்கள் காட்டுகின்றனர்:

''இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தொழுகைக்காக எழுந்து இரண்டு தோள்புயங்கள் வரை கைகளை உயர்த்துவார்கள். பின்னர் தக்பீர் கட்டுவார்கள். ருகூஉ செய்ய விரும்பின் மேற்கூறியவாறே செய்வார்கள். ருகூஉவிலிருந்து எழுந்தாலும் அவ்வாறே செய்வார்கள். ஆனால் ஸுஜூதிலிருந்து எழும்பும்போது அப்படிச் செய்ய மாட்டார்கள்.'' (ஜம்உல் பவாயித், பாகம் 1, பக்கம் 190)

இதற்கு முரண்பட்ட பல ஆதாரங்கள் வந்துள்ளமையாலும், இந்த அறிவிப்பைக் கூறிய இப்னு உமரின் செயல்பாடு இதற்கு மாற்றமாக அமைந்திருந்தமையாலும் இதற்கு மாற்றமான கருத்தை ஹனபிகள் கொண்டுள்ளனர்.

முஜாஹித் கீழ்வருமாறு அறிவிக்கிறார்:

''நான் இப்னு உமரின் பின்னால் தொழுதேன். அவர் முதலாவது தக்பீரில் தவிர வேறெங்கும் கைகளை உயர்த்தவில்லை.''

இந்தச் செயல்பாட்டை ஏற்று, மேற்குறிப்பிடப்பட்ட இப்னு உமரின் அறிவிப்பை ஹனபிகள் விட்டு விட்டனர். [8]

**2. நாய் எச்சில்படுத்திய பாத்திரத்தைச் சுத்தம் செய்தல்**

நாய் எச்சில்படுத்திய பாத்திரத்தை ஏழு முறை கழுவ வேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும். இதற்கு அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கும் கீழ்வரும் ஹதீஸை அவர்கள் ஆதாரம் காட்டுகிறார்கள்:

''உங்கள் பாத்திரத்தை நாய் எச்சில்படுத்தினால், அதில் நீர் குடித்தால் ஏழுமுறை அதனைக் கழுவுங்கள்'' எனவும் வந்துள்ளது. (ஜம்உல் பவாயித், பாகம் 1, பக்கம் 66)

புகாரி, முஸ்லிம் போன்ற நூல்கள் பலவற்றிலும் பலவகையில் இந்த ஹதீஸ் வந்துள்ளது.

---

8. அஸருல் இஃதிலாப் பில் கவாயித் அல்உஸூலிய்யா, பக். 221.

★ அங்கீகரிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சட்டங்களை எடுப்பதற்கான சுய ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனபிகள் இந்த ஹதீஸின் அடிப்படையில் தீர்வு கூறவில்லை. ஏனெனில், அபூஹுரைரா இந்த ஹதீஸுக்கு மாற்றமாக, மூன்று முறையே நாயின் எச்சில் பட்டால் பாத்திரங்களைக் கழுவுவார் என தாரவி, தாரகுத்னி போன்றோர் அறிவிப்பு செய்துள்ளனர்.[9]

மேற்கூறிய காரணங்களிலிருந்தும் எடுத்துக்காட்டுகளிலிருந்தும், இமாம்கள் கருத்து வேறுபாடு கொண்டமைக்கான நியாயமான காரணங்கள் நமக்குத் தெளிவாகின்றன. இக்காரணங்கள் பற்றிய தெளிவு அற்றோரே கருத்து வேறுபாடுகள் தோன்றக் கூடாது என்கின்றனர். அல்லது இமாம்களைக் குறைகாண முனைகின்றனர்.

---

9. தஸ்ஹீலுல் உஸூல், பக். 82.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

இஸ்லாமியச் சட்ட ஆய்வாளர்கள் சட்டப் பகுதியில் தோன்றும் கருத்து வேறுபாடுகள் குறித்து இருவகை நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர். ஒரு சாரார் பல கருத்துகளில் ஒன்று மட்டுமே சரியானதாக இருக்க வேண்டியதில்லை. பலவும் சரியாக இருக்க முடியும் என்கின்றனர். இக்கருத்தை அவர்கள் விளக்கும் ஒழுங்கை இங்கே தருவது பொருத்தமாக அமைய முடியும்:

> ''இஜ்திஹாதிற்கு உட்படும் மனித ஆய்வுக்கு இடமளிக்கப்பட்டுள்ள பிரச்சனைகளில் அல்லாஹ்விடம் சத்தியம் ஒன்றாக இருப்பதில்லை. அது பலவாக அமைந்திருக்க முடியும். ஒவ்வொரு முஜ்தஹிதும் என்ன முடிவுக்கு வருகிறாரோ அவை ஒவ்வொன்றும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளும் முடிவேயாகும்.''

இப்பிரிவினர் இஸ்லாமியச் சட்ட ஆய்வாளர்களிடத்தில் 'அல்-முஸவ்விபத்' என அழைக்கப்படுகிறார்கள்.

இவர்கள் தமது கருத்திற்கு அல்குர்ஆனிலிருந்தும், ஹதீஸ்களிலிருந்தும் சில ஆதாரங்களை முன்வைக்கிறார்கள். இவர்களது ஆதாரங்களை முழுமையாக ஏற்பது சிரமமாக இருப்பினும் இவர்களது இந்தக் கருத்து சில பகுதிகளில் மிகப் பொருத்தமாக இருப்பதனை அவதானிக்க முடியும்.

சில விடயங்கள் பல அமைப்பில் நிறைவேற்றப்பட முடியும் என அல்லாஹ்வே விரும்பியிருப்பதை அவதானிக்க முடியும். அல்குர்ஆனை ஓதும் ஒழுங்கு இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைய முடியும். ஏழு, அல்லது பத்து ஓதும் முறை(கிராஅத்)களை இறைத்தூதரிடம் இருந்து பெற்று இமாம்கள் அறிவித்துள்ளனர். இந்த அனைத்து முறைகளும் அங்கீகரிக்கப்பட்டவை. சிலபோது வேறு சில சட்டக்கிளைப் பிரச்சனைகளிலும் இதற்கு எடுத்துக்காட்டுகள் முன்வைக்கப்பட முடியும். ஒரு பிரச்சனையில் இரு பக்கங்களுக்கும் பலமான ஆதாரங்கள் முன்வைக்கப்படும்போது அதுவும் இவ்வகை சார்ந்தது என சில சட்ட அறிஞர்கள் கொள்கின்றனர்.

காலம், சூழல், நிலைமை இவற்றுக்கேற்ப சட்டத் தீர்வுகள் வேறுபட்டமைவதும் இவ்வகை சார்ந்ததாகும். இஸ்லாமிய நாடு, இஸ்லாமல்லாத நாடு (தாருல் இஸ்லாம், தாருல் குப்ர்) இரண்டினதும் சூழல் வித்தியாசமானது. நவீன கால பிரச்சனைகளும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகளும் முன்னைய இமாம்களது காலத்தை விட மிகவும் வேறுபட்டவை. சாதாரண நிலையும், நிர்ப்பந்த நிலையும் வித்தியாச மானவை. இவ்வாறு காலம், சூழல், நிலைமை என்பவற்றுக்கு ஏற்ப ஒரே பிரச்சனைக்குப் பல தீர்வுகள் இருக்க முடியும். அவை அனைத்தும் சரியானவையே. இந்த வகையில் ''காலம், இடம், நிலைமை, சூழலுக்கேற்ப தீர்வுகள் மாற முடியும்'' என்றொரு விதியையே இஸ்லாமியச் சட்ட அறிஞர்கள் ஆக்கியுள்ளனர்.

இமாம்களுக்கும் அவர்களது மாணவர்களுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகளை நோக்கும்போது பல சந்தர்ப்பங்களில் அவை ஆதாரங்களால் உருவான கருத்து வேறுபாடன்றி, கால மாற்றத்தால் உருவான கருத்து வேறுபாடு என அறிஞர்கள் விளக்குவர்.

இஜ்திஹாதுக்கு உட்படும் விடயங்களில் பல கருத்துகள் தோன்றும் போது அவற்றில் ஒன்று மட்டுமே சரியானது. ஏனைய அனைத்தும் தவறானவை என்பது கருத்து வேறுபாடுகளைப் பொறுத்தவரையில் இன்னொரு நிலைப்பாடாகும். இதுவே பெரும்பாலான இஸ்லாமியச் சட்ட அறிஞர்களின் கருத்தாகும். இதுவே ஆதாரபூர்வமானதுமாகும்.

எனினும் ''இஜ்திஹாதுக்கு உட்படும் பிரச்சனைகளில் எதிர்ப்புக் காட்டல் என்பது கிடையாது'' என்பது இஸ்லாமியச் சட்ட அறிஞர்கள் வகுத்துள்ள ஒரு முக்கிய விதி. இந்த வகையில் இஜ்திஹாதுக்கு உட்படும் விடயங்களில் தனக்கு மாற்றமான கருத்து கொண்டவரை எதிர்ப்பது, அது தீமை எனக்கண்டு தடுக்க முயல்வது கூடாததாகும். ஆதாரங்களை வைத்து தானொரு முடிவுக்கு வந்த அதே உரிமை அடுத்தவருக்கும் இருக்கிறது. அந்த வகையில் அவரது கருத்தைப் பின்பற்றும் உரிமையில் தான் தலையிடுதல் எவ்வகையிலும் நியாயமானதல்ல. தான் அவரது கருத்தைப் பிழையெனக் காணின் அது ஒரு கருத்துப் பரிமாறலின் ஊடாகவே விளக்கப்பட முடியும். எதிர்ப்பு, தீமையைத் தடுத்தல் என்ற செயல்பாட்டின் ஊடாகவன்று.

இமாம் இப்னுல் கையும் தனது 'இஃலாமுல் முவக்கயீன்' என்ற நூலில் கீழ்வரும் அறிவிப்பைத் தருகிறார்:

''உமர்(ரலி) ஒரு மனிதரைச் சந்திக்கிறார். 'அவரிடம் அக்குறிப்பிட்ட பிரச்சனையில் என்ன செய்தீர்' என வினவினார். அதற்கு அவர் 'அலீயும், ஸைதும் அதற்கு இந்த வகையில் தீர்ப்பு சொன்னார்கள்' எனப் பதிலளித்தார். அதற்கு உமர் 'நானாக இருப்பின் அதற்கான தீர்ப்பை இவ்வாறு அமைத்திருப்பேன்' என்றார். 'உம்மிடம்தான் அதிகாரம் இருக்கிறதே, இப்போதும் நீர் அதனைச் செய்யலாமே' எனக் கூற உமர்(ரலி) அம்மனிதரைப் பார்த்து 'அல்குர்ஆன், அல்லது ஸுன்னாவிடம் செல்வதாயின் நான் அவ்வாறு செய்ய முடியும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கு உட்படும் விடயம். ஆய்வில் எல்லாக் கருத்துகளும் சமபலத்தையே பெறுகின்றன' என்றார்.''

''ஒரு முஜ்தஹித் ஆய்வு செய்து அது சரியாக அமைந்துவிட்டால் அவருக்கு இரண்டு கூலிகள் கிடைக்கின்றன. பிழையாக அமைந்து விட்டால் ஒரு கூலி கிடைக்கிறது.''(ஸஹீஹ் புகாரி)

என்ற இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸூம் இதனையே காட்டு கிறது. பிழையாக அமைந்து விட்டாலும் அப்பிழையைச் செய்தவருக்கு அல்லாஹ் கூலி கொடுக்கிறான். இந்நிலையில் அவரை எப்படி எதிர்க்க முடியும்? பிழை எது, சரி எது என ஆய்வு செய்ய முடியும். கருத்துப் பரிமாற முடியும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இஜ்திஹாத் வழியாக வெளிவந்த ஒரு கருத்தை தீமை எனக் கருதி எதிர்க்கும் போக்கே இங்கு தவறானது எனக் கொள்ளப்படுகிறது. நபித்தோழர்கள் கருத்து வேறுபாடு கொண்டபோது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நடந்துகொண்ட முறைக்கு ஏற்கனவே சில எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. அவை இந்த விதிக்கு ஆதாரமாக அமைகின்றன.

இஸ்லாமியச் சட்ட ஆய்வாளர்களது நோக்கில் சட்டக் கிளைக் கருத்து வேறுபாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு முஸ்லிம் எடுக்க வேண்டிய நிலைப்பாடு இரு வகையாக அமைகிறது என்பதையே மேற்போந்த விளக்கம் காட்டுகிறது.

1. ஒரு பிரச்சனைக்கு பல தீர்வுகள் முன்வைக்கப்படலாம். அவை அனைத்தும் சரியாகவே அமைய முடியும். இடம், காலம், சூழல், நிலைமை இதற்குக் காரணமாக அமையலாம். அல்லது சட்ட வசனங்களின் அமைப்பே அதற்குக் காரணமாகலாம்.

2. இஜ்திஹாதுக்கு உட்படும் பிரச்சனைகளில் எதிர்த்துச் செயல் படுதல் என்பது கிடையாது.

இவ்விரு நிலைப்பாடுகளும் சரியாகப் புரிந்துகொள்ளப்படல் சட்டக் கிளைக் கருத்து வேறுபாடுகள் பற்றிய சரியான கண்ணோட்டத்திற்கு வழி வகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்துறையிலுள்ள கிளைப் பிரச்சனைகளிலும்
அழைப்புப் பணியின் களத்திலும்
கருத்து வேறுபாடுகள் உருவாவது மிகவும்
இயல்பானது.
இந்த எதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதே
ஒற்றுமையை, சகோதரத்துவத்தைக்
கட்டியெழுப்ப முன்வைக்கப்படும்
முதல் அடியாகும்.
தனது கருத்து மட்டுமே சரியானது;
ஏனைய அனைத்தும் தவறானவை;
எனது முறை மட்டுமே சத்தியம்;
ஏனைய அனைத்தும் அசத்தியம் எனக் கருதினால்
கலந்துரையாடலுக்கு இடமில்லாது போகும்.
இந்த உண்மையையே இந்நூல்
முன்வைக்க முயல்கிறது.

$ 5.00

மெல்லினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org